765
765
1925
765

# THE STORY OF THE MANÛS

(TAMIL)

BY

A. SINGARAVELOO MUDALIAR,

*Tamil Pandit, Pachaiappah's College, Madras*

THE REGISTRAR OF
2nd FEB 1925

MADRAS:

MARASWAMY NAIDU & SONS

1925

[Price 10 As.

R6
M25
148366

# மநுவம்ச சரித்திரம்

சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

ஆ. சிங்காரவேலு முதலியார்

இயற்றியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 FEB 1925
MADRAS

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 10 அணா

Printed at
the Aurora Press,
Madras.

148316

# முகவுரை

மநுவம்ச சரித்திரம் இஃது, சூர்ய வம்சத்து அரசர்கள் முதலியோருக்கு முதல்வனாகிய சூரியனை முதலாகக் கொண்டுள்ள மநுக்களின் சரித்திரங்களாம். இச்சரிதை, ஆரியம் ஆந்திரம் முதலிய பாஷைகளில் சில புராணங்களிலும், ஆந்திரத்தில் தனியான பெருஞ் செய்யுள் நடையினும் கூறப்பட்டிருக்கிறது. தமிழில் மநுவம்சங்களைத் தெரிவிக்கும் நூல் ஒன்றும் இன்று. ஆயினும், சில மநுக்களின் சரிதைகள் மாத்திரம் பாகவதம், ஆரியத்தினின்று மொழி பெயர்த்துள்ள தேவி பாகவதம் முதலிய புராணங்களில் காணப்படுகின்றன. மற்ற சரிதங்களை என்னுடைய சரித்திர ஆராய்ச்சியில் ஆங்காங்கு குறித்துள்ளவைகளைக் கபோத நியாய மாகப் பொருக்கி எடுத்துத் தற்காலத் தமிழ் நாட்டு மாணவர் பொருட்டு எழுதினேன். இது பன்னிரண்டு அத்யாயங்களையும், பதினன்கு மநுக்களின் சரிதங் களையும் கொண்டுள்ளது. இதில் பெரும்பான்மையும் பல நீதிகள் அடங்கியுள்ளன. இதனைக் கலாசாலைச் சிறு வர்க்குப் போதகாசிரியர்கள் ஓர் பாடமாக வைப்பின் இது அவர்க்கோர் போதவைப்பு என்பதற்கையமின்று. இதிலுள்ள சில மநுக்களின் சரிதங்கள் மிகச் சுருங் கினவை அதன் காரணம் மகா புராணங்களில் மற்ற மநுக்களின சரிதங்கள் காணப்படாமையே யாம். இச் சரிதங்களும், மநுக்களின் காலவரைகளும் தமிழில்

எழுதவேண்டுமெனச் சிலர் கேட்டுக்கொண்டதில் இதனை நான் எழுதினேன். இதில் ஏதேனும் வழுவுளதாயின் ஆன்றோர் பொறுத்தருள்க.

சுருங்கிய ஏனைய மநுக்களின் சரிதங்களை அறிந்தோர் எனக்கறிவிப்பின், அந்நன்றி மறவாது அதனை மறு பதிப்பில் வெளியிடத் தவறேன்.

115-வது பக்கத்தில் 3. உத்தம மநு சரிதைக்குப் பின், சுராஷ்டிரன் சரிதை முதல் **4.** தாமச மநுவின் சரிதையாகக் கொள்ளல் வேண்டும்.

கிருஷ்ணம்பேட்டை,<br>2/40, பிள்ளையார்<br>கோவில் தெரு,<br>1-1-1925.

இங்ஙனம்,<br>ஆ. சிங்காரவேலு முதலியார்.

## உள்ளுறை

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுவாயம்பு மநு | 12 |
| 2. | சுவாரோசிஷ மநு | 70 |
| 3. | உத்தம மநு | 115 |
| 4. | தாமச மநு * | 115 |
| 5. | ரைவத மநு | 121 |
| 6. | சாக்ஷுஷ மநு | 127 |
| 7. | வைவச்சுத மநு | 131 |
| 8. | சூரியசாவர்ணி மநு | 134 |
| 9. | தக்ஷசாவர்ணி மநு | 135 |
| 10. | பிரம்மசாவர்ணி அல்லது மேருசாவர்ணி மநு | 136 |
| 11. | தருமசாவர்ணி அல்லது சூரியசாவர்ணி அல்லது நபாக மநு | 137 |
| 12. | ருத்ரசாவர்ணி அல்லது பத்ரசாவர்ணி அல்லது சந்திரசாவர்ணி மநு | 142 |
| 13. | தேவசாவர்ணி மநு | 143 |
| 14. | இந்திரசாவர்ணி அல்லது விஷ்ணுசாவர்ணி அல்லது பௌத்திய மநு | 144 |
| — | மன்வந்தரத் தளவை | 146 |


* 3. உத்தம மநுவின் சரிதைக்குப்பின், சுராஷ்டிரன் சரிதை முதல் 4. தாமச மநுவின் சரிதையாகக் கொள்க.

உ

கடவுள் துணை

# மநுவம்ச சரித்திரம்

## முதலாம் அத்யாயம்

### நாட்டுச் சிறப்பு

திருமாலாகிய லக்ஷ்மிநாதன் உந்தியிற் பூத்தவனாகிய பிரமதேவனால் படைக்கப்பட்ட சராசரங்களில் முதன்மை பெற்றதும், எல்லாம் வல்ல நாராயணனே மனித வுருக்கொண்டு திரு அவதரித்து உயர்ந்தோர் ஒழுக்கத்தை நடத்திக்காட்டப் பெற்றதும், மற்றெல்லா ரவிகுலத் தரசரும் உதித்து மநுநூன் முறை தவறாது அரசாளப் பெற்றதுமாகிய கோசலம் எனும் நாட்டிற்கு முத்தாரம்போல் ஒழுகிவரும் சரயு வென்னும் நதி உளது. அந் நதி யெக்காலத்தும் இடையறாது ஒழுகும் வண்ணம் எண்ணிய அக்குல முதல்வனாகிய பானுமூர்த்தி இந்திரனை நோக்கித் தேவ தேவனாகிய சக்கரவர்த்தித் திருமகன் அவதரித்த திருநாடாதலின் அந்நாட்டை யெந்நாட்டவரும் நன்னாடென மதிக்குமாறு ஆறுவளம்படச் செய்கவெனப் பணித்தனன்.

அவ் வாணையைச் சிரமேற் கொண்ட மேகநாதன், ஆருகவென்று ஏவலரைக்கூய் நமது ஆணையால் மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ முதலியவைகளைப் பொழியும் சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் எனும் மேகங்களை வருவிக்க என்றனன். அவ்வாறு வந்த கொண்டல்களை நோக்கி நீவிர் அனைவரும் பரவையிற் பறந்து வாரி அருந்தி, எவ்விலங்கல்களினும் துளங்கல் பெறாத இமயத்துப் பொழிக என்றனன்.

அவ்வாறே உமாபதியின் விபூதி யணிந்த திருமேனி போல் எழுந்த மேகங்கள், ஆகாய வழியை யலங்கரித்து நதிபதியாகிய கடலிற் படிந்து அந் நீரை நிரம்பவுண்டு அகிற்கூட்டுக் களபச்சேற்றை மார்பி லணிந்த திருமகளைத் திருமார்பில் பெற்றவனாகிய கமலக்கண்ணனது திருமேனிபோல் மீண்டன. மீண்டவப்பயோதரங்களின் எழுச்சி, நம்பனாகிய சிவமூர்த்தியின் மாதுலனாகிய இமயன், வெம்மையை யடைந்தனன்; அவனது வெம்மையை யாற்றுதல் வேண்டும் ; அவனைத் தண்ணீரால் ஆட்டுவோம் ; என்பதை யொத்தது. அம் மேகங்கள், அம் மலையினைப் பொன்னென நினைத்து வெள்ளி விழுதுக ளிடையில் விடுவன, தீனர்கள் 'ஏற்பதிகழ்ச்சி' என வெண்ணி நம்மை யொன்றுமிரக்கிலர் எனத் தாமே தமக்குள்ள பொருள்கள் எல்லாவற்றையும் உவந்துகொடுக்கும் முதல் வள்ளல்களையும் ஒத்தன. அவ்வகை பொழிந்ததால் வந்த வெள்ளம் மானத்தை எண்ணித் தருமவழி தப்பாது செங்கோலோச்சி மநுநூன்முறை தவறாது ஒழுகிய வேந்தனது புகழ்போலவும், ஞானத்தின் முதன்மைபெற்ற மோன நெறியில் நிற்போராகிய உயர்ந்தாரில் செய்த தானம் போலவும் இருந்தது.

மற்றும் அது, மணிகளையும், பொற்குவியல்களையும், மயிற் பீலிகளையும், அழகுள்ள ஆனைத்தந்தங்களையும், முத்துக்களையும் கொண்டு பெருகுதலால் பல நாடுகளிற் சென்று வாணிபஞ் செய்யும் வர்த்தகரையும் ஒத்தது. பின்னும் அந்நீத்தம், பன்னிறங்களையுடைய மலர்களையும், மஞ்சள் நிறங்கொண்ட மகரந்தங்களையும் ஒருபால் பெற்றும், தேனோடு கலப்புற்றும், சிவந்த பொன்னுடன் கலந்தும், ஆனைமதத்துடன் விரவியும் வருதலால் பல நிறங்கொண்ட வானவில்லை யொத்தும், மலைகளையுருட்டித் தூக்கிக் கொண்டும், மரங்களை முரித்தும், பக்கங்களி லுள்ள இலை முதலிய பொருள்களையு மேந்திச் செல்லுதல் இராவண வதத்தின்பொருட்டு ஆழிகடக்க ஆழிதொட் டானாகிய இராமன் வேண்ட அணைவிரும்பிச்செய்த அரிக்கூட்டங்களை ஒத்தும், ஒருபால் தேனையுண்ணு மீக்களும் வண்டுகளும் மொய்த்தலாலும் அளவு கடந்து ஊக்கங்கொண்டு உள்ளே தெளிவின்றி, தேக்கு எறிந்து ஆடி வருதலாலும் மதர்த்தகள்ளையுண்ட குடியர்களை ஒத்தும் இருந்தது.

இவ்வாறு சரயு நதியால் வளம் பெற்ற அக்கோசல நாடு, வரம்புகள்தோறும் பலமுத்துக்களையும், நீர்ததும் புகிற மடைகள் தோறும் சங்குகளையும், செய்கரைகள் தோறும் செம்பொற் குவியல்களையும், எருமைகள் நீரில் மூழ்கி யெழும் குழிகள் தோறும் செங்கழுநீர் மலர்களை யும், வெற்றிடங்கள் தோறும் பவளக் குவியல்களையும், செந்நெற் பரப்பெலாம் அன்னங்களையும், பக்கங்களிலுள்ள கரம்புகள் எல்லாம் செந்தேன்களையும், அழகிய பூஞ் சோலைகள் தோறும் வண்டுக் கூட்டங்களையும் பெற்றிருந் தது. அந்நாட்டில் ஆற்றின் வெள்ளம் பாய்ந்தோடும்

ஓசையும், உழவரது கருப்பாலை பாயும் ஓசையும், ஆலைச் சாறுபாய் ஓசையும், கடலின் கணுள்ள சங்குகள் ஒலிக்கும் ஓசையும், எருதுகள் பாய்ந்து செல்லும் ஓசையும், நீரில் எருமைகள் பாய்கிற ஓசையும், ஒன்றுக்கொன்று மேற்பட்டு ஒலிக்கும். மற்றும் அங்குமருதம் என்னும்கோமான், ஆங்குள்ளசோலைகளிலுள்ள மயில்கள் நடனஞ் செய்ய செவ்விய தாமரைகள் விளக்குகள் ஏந்த, மேகங்கள் மத்தள மொத்து முழங்க, இவையனைத்தையும் குவளை கண்விழித்து நோக்க, தெள்ளிய சோலைகள் அரசன் வருவதற்குமுன் திரையிட, மகரவீணையின் இனியரஸம்போல வண்டுகள் இனிய ஓசையுடன் பாடா நிற்கக் கொலுவிருந்தனன்.

அந்நாட்டுத் தாமரைகளே, வண்டுகளாலும், மலர் மகளாலும் ஊறுபடுவன. காமுகரே பெண்களின் கண்களாலும், மதனனம்பாலும் காயமுறுவர். மேகங்களே கடல் முத்துக்களாலும் பவளங்களாலும் ஊறுபடுவன நல்லோர் நாக்களே சத்தியவாக்குகளாலும் நூற்பொருள்களாலும் தழும்புறுவன அன்றி வேறு பொருள்கள் ஊறடையா. அக்கோசல நாட்டில் சங்குகள் நீரிலும், நிழலில் எருமைகளும், மலர்மாலை களில் வண்டுகளும், தாமரையில் சிதேவியும், புதர்களில் ஆமைகளும், நீர்த்துறைகளில் இப்பிகளும், நெற்போர்களில் அன்னங்களும், சோலைகளில் மயில்களும் உறங்குவன. அன்றி வேறு பிராணிகள் உறங்கா. அந்நாட்டின் ஆலையிலொழுகும் தேனும் நீர்வளங்கொண்ட தெங்கு பனைமுதலியவற்றின் பாளைகளினின்று ஒழுகுகின்ற தேன்களும், சோலைகளிலுள்ள பழங்களினின்று ஒழுகுகின்ற இனிய தேன்களும், அப்பழ மரங்களில் கட்டியுள்ள தேன் கூடுகளி

னின்று ஒழுகுகின்ற தேனும், ஆடவரும் மகளிரு மணிந்த அரிய மலர்மாலைகளினின்று ஒழுகுகின்ற தேன்களும் அளவுகடந்து பெருகிச்சென்று மடுக்களினும் யாறுகளினும் விழ அவற்றிலுள்ள மீன்கள் எல்லாம் நிரம்ப வுண்டுகளித்துத் துள்ளியுலாவா நிற்கும்.

அவ்வகை வளம்பெற்ற மடுக்களிலுள்ள தண்தாமரைப்போதுகளில் மழலை அன்னங்கள், நீராடலை யெண்ணித் தம் பறழ்களை விட்டுப்பிரிந்து, அந் நீர் நிலையில் மூழ்கியெழும் மதர்த்த வெருமைகள் தம் கன்றுகளை யெண்ணித்தாவ முலைவழி பெருகிய பாலையுண்டு களிப்பனவாம். அச்சோலைகளில் குயிற் கூட்டங்கள் திருமணச் சடங்குசெய்ய மயிற் கூட்டங்கள் ஆங்கு மணத்தின் பொருட்டு வந்த ஏனைப்புள்ளினங்களை நடனமாடிக் களிப்பிக்கும். அச் சோலைகளிலுள்ள பூவணைகளில் அன்னங்கள் கண்படை கொள்ள வண்டின் குழாங்கள் அந்த அன்னங்களைச் செவ்வழி யென்னும் பண்பாடித் துயிலெழுப்புவன. அந்நாட்டுக் குடிகள், நெல்லரிகளை அடித்து ஆகாயத்தை யளாவப் போரிட்டுக் குறிவைத்துப் பின் நெற்களைக்குவித்து ஆண்டுக்கள வேள்வியாக, வந்த அதிதிகள் ஏழைகள் முதலியோர்க்குத் தானஞ்செய்து மிகுந்தவைகளை வண்டிகள் புதைய இட்டு வீடு சென்று இல்லறம் நடத்துவார்.

## நகரச் சிறப்பு

மேற்கூறிய வளமுள்ள நாட்டினாற் சூழப்பட்ட நகரம், செவ்விய மதுரஞ்சேர்ந்த பொருளோடமைந்த சிறந்த நுட்பம் வாய்ந்த இனிய சொற்களாற் பாடவல்ல தமிழ்க்கவிகளும் வடநூற்கவிவல்ல முனிவர்களும் புகழப்பெற்றது. சுவர்க்க மத்ய பாதலத்துள்ளோர் அனை

வரும் தவஞ்செய்து அடைதற்கு விரும்புகிற அந்த வுலகத்தோர் இழிவதற்கு ஆசைபடுகின்றதுமான அயோத்தியாம். அந்நகரத்தைப் பூமிதேவிக்கு முகமெனக் கூறலாமா? திலகமெனலாமா? கண்ணெனலாமா? நிறை நெடு மங்கலசூத்ர மெனலாமா? அம்மண் மகள் மார்பிலணிந்த ஆரம் எனலாமா? உயிரினிருக்கையெனக் கூறலாமா? திருமகளாகிய மலர் மகள் நிலைத்து வசிக்குஞ் செந்தாமரை மலர் என்னலாமா? அன்றி, யத்திருமகளை மார்பில் வைத்தவனாகிய, நெடுமால் மார்பிலணிந்த கௌத்துவாபரணமெனக் கூறலாமா? அன்றி, யம்மணியமைக்கப்பெற்ற பேழை யெனலாமா? தேவர் உலகமென்னும் சுவர்க்கத்தும்பரிருக்கும் மேலுலக மெனலாமா? அன்றி, யெல்லா ஆத்மாக்களும் ஊழிக்காலத்து ஒழிவாயிருக்கும் பரமபதம் என்னலாமா? அதனை, யின்னது என என்னுலியம்பல் ஆகாது.

உமாதேவியை யிடப்பாகம் பெற்றுள்ள ஒப்பற்ற ருத்ரனும், பூதேவி ஸ்ரீதேவியாகிய இவர்களை யிரண்டு பக்கங்களிலும் கொண்டிருக்கிற திருமாலும், வெண்டாமரையை ஆதாரமாகக் கொண்ட கலைமகளை வாக்கிற் பெற்ற பிரமதேவனும், மற்றத் தேவர்களும் கண்டிலாத இந்நகரத்தின் அழகினைக்காணவேண்டி யாகாயவழியினின்றே சந்திர சூரியர்கள் இமையா நோக்கினையுடையராய் நாடோறும் சுற்றி வருவர் எனின் இந்நகரப் பெருமையை என்னென்று கூறலாம். அந்நகரம் எல்லா அரசர் கூட்டங்களாலும் நிறையப்பெற்றது. எல்லாவித அணிகளாலும் அலங் கரிக்கப்பட்டது. பெறுதற்கு அருமையான நவமணிகள் எல்லாம் அவ்விடத்தனவாம். இரத கஜ துரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும்

அவ்விடத்தனவாம். எல்லாக்கல்வி கேள்விகள் நிரம்பிய முனிவர்களும், தேவர்களும், இயக்கர்களும், வித்தியாதரர் முதலியவர்களும் அந்நகரப்பெருமையைப் புகழ்வர் என்றால் அதற் குவமையாக எந் நகரத்தைக் கூறலாகும்.

அந்நகரத்து வேதியர் வீதிகள், எக்காலத்தும் வேள்வியியற்று மறையவர்களின் வேத வொலிகளால் நிரம்பி யிருக்கும். அரசர் வீதிகள், நியாய சாத்திரங்களை யாராயும் ஒலியால் நிரம்பியிருப்பனவாம். வணிகர் வீதிகள், வாணிகஞ்செய்வோர் பண்டமாற்று மொலியால் நிரம்பியிருப்பனவாம், வேளாண் வீதிகள், ஏற்போர்க்கு ஈவோரிடும் தானவொலியால் நிரம்புவனவாம். அந்நகர ஆவணம், பசியகடலிற் பிறந்து வணிகர் கைப்பட்ட பருமணி முத்துக்களின் குழுவாலும், பதும மலரின் இதழைப்போல் செவந்த மாணிக்கங்களாலும், ஒளிவிளங்கு வயிரமணிகளாலும் ஒளிப்பது, செங்கதிரெறிக்கு செஞ்ஞாயிறும், அமுதச்செழுங்கதிர்வீசும் மதியமும், ஏனைப்பல்கதிரெறிக்கும் நக்ஷத்ர கூட்டங்களும், இந்த இடத்துக் குடிபுகுந்து விளங்குவனபோல் பிரகாசித்திருக்கும்.

அவ்வகை பெருமைவாய்ந்த நகரத்து நீரரண்மதிலரண் முதலியவற்றாற் காக்கப்பட்ட அரணில் நவரத்ன கசிதமான உபரிகையில் சிங்கத்தால் தாங்கப் பெற்ற அரியணைமேல், முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், மலர்மாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம், எனும் சின்னங்களுடன், மந்திரியர், புரோகிதர், சேனபதியர், தூதர், சாரணர், கருமாதிகாரர், சுற்றத்தவர், கடைகாப்பாளர்,

நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானை மறவர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர் சூழ்ந்திருக்க அடைக்கலமெனத் தன்னைவந்து அடைந்தவரை ஆதரிப்பவனும், தன்னையடையாத பகைவரை உயிர் நீங்குமட்டும் வருத்துகின்ற ஆலால விடத்தைப்போல்பவனும், ஈகையால் கைம்மாறு கருதாத மேகம்போலீந்து ஓயாத பெருங்கையுடையவனும், வில்வலியால் ஓயாது பொழிகின்ற அம்புராசியால் பகைவரை வென்று வெற்றியுறுபவனும், ஆராயத்தக்க கலைகளுக்கு இருப்பிடமானவனும், அலர்மகளுக்கு இருப்பிடமாகிய மார்பையுடைய திருமாலையொத்தவனும், முத்துக்குச்சுகள் சூழ்ந்து தூங்குவதால் குளிர்ச்சியைத் தருவதும் நிழலைத்தருவதுமாகிய வெண் கொற்றக்குடையை யுடையவனும், எல்லா உயிர்களையுந் தன்னுயிர்போல் காத்தலால் தாய்போல்பவனும், நீதிதவறாது செங்கோல் செலுத்தலால் தருமதேவதையை யொத்தவனும், அண்டினோர் மிடியை நீக்குதலால் ஐந்தருக்கள் போல்பவனும், பகைவரை வெல்லும் திறத்தால் கூற்றனையொத்தவனும், கல்விநிறைவால் ஆதிசேடனை யொத்தவனும், பெண்மக்களைக் கவரும் தோள்வனப்பால் காமனையொத்தவனும், தன்னையடுத்தவரை யாதரிக்கும் இன்முகமுஞ் சொல்லுமுடையவனும், எல்லா அரசர்களையும் தன்வயமாக்கிக்காக்கும் வன்மையுடையவனும், எண்டிக்குகளிலும் தனது வெற்றியை நாட்டினவனும், தெய்வ வுலகத்திற்கு அப்பாலும் தன் கீர்த்தியைப் பரவச்செய்தவனும் ஆகிய சுவாயம்புமநு வென்பவன் வீற்றிருந்தான்.

இவனுக்கு இப்பெயர் எக்காரணத்தினால் வந்ததெனின்: காலம், இறப்பு, எதிர்வு, நிகழ்வென மூன்றும்.

இக்காலத்தைச் சிலர் நித்யமெனக் கூறுவர். சிலர் காலமென வொன்றில்லை யென்பர். ஆயினும் நாம் உண்டெனும் பக்ஷத்தவரைச் சார்ந்து அக்கால அளவின் இலக்கணத்தை யுரைப்பாம். மேற்கூறிய காலத்தைக் கணிக்குமிடத்து இலக்கண நூலார் கொள்கைப்படி கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும் மாத்திரைக் களவாம். கணிதநூலார், கைந்நொடியிரண்டு கொண்டது மாத்திரை யென்ப. மாத்திரை (உ) கொண்டது குரு, குரு, (உ) கொண்டது உயிர், உயிர் (சு) கொண்டது க்ஷணிகம் அது (கஉ) கொண்டது விநாடி, விநாடி (சூ) கொண்டது நாழிகை, நாழிகை (எ௨) கொண்டது சாமம், சாமம் (ச) கொண்டது பொழுது, பொழுது (உ) கொண்டது நாள், நாள் (ந௰) கொண்டது மாதம், மாதம் (கஉ) கொண்டது வருஷம். வருஷம் பதினேழு லக்ஷத்து இருபத்தெண்ணாயிரங் கொண்டது கிருதயுகம், அந்த வருஷம், பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்றாறாயிரங் கொண்டது திரேதாயுகம், அவ் வாண்டுகள், எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரங் கொண்டது துவாபரயுகம், அவ் வற்சரங்கள், நாலு லக்ஷத்து முப்பத்திரண்டாயிரம் கொண்டது கலியுகம், இந்நான்கு யுகங்களும் கூடின வருஷங்கள் நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரம். இது சதுர்யுகம் என்னும் மகாயுகம்.

இந்த மகாயுகம் பதினெட்டுச் சென்றது ஒரு மநுவிற்கு இராச்சியம். இந்த மநுக்களின் இராச்சியம் எழுபத்தினான்கு சென்றால் இந்திரனுக்கு இராச்சியம். இந்த இந்திரர்களின் இராச்சியம் இருநூற்றெழுபது சென்றால் பிரமனுக்கு ஒரு நாள். இந்த நாட்கள் (ந௰) சென்றால் பிரமனுக்கு ஒரு மாதம். மாதங்கள் (கஉ)

சென்றால் ஒரு வருஷம், அவ்வகை வருஷங்கள் நூறு முடியின் பிரமனுக்கு ஆயுள் முடிவு. இப்படி முந்நூற்று அறுபது வருஷங்கள் சென்றால் ஆதிப்பிரமனுக்குப் பிரளயகாலம். இவ்வாறு பிரளயங்கள் முடியுந்தோறும் திருமால், தமது திருவுள்ளத்தில் சிருட்டியைக் கருதி மனதிலும், கண்களினும், வாக்கினும், செவியினும், மூக்கிலும், நாபியிலும் பிரமனைப்படைப்பர். ஒரு கற்பத்தில் அண்டத்தைச் சிருட்டிக்கக் கடல் வண்ணன் நினைத்தனன். நெற்றியில் வியர்வை தோன்றியது. அது மகாப் பிரளயமாயிற்று. அதில் ஒரு பொன்முட்டை தோன்றியது. அவ்வண்டத்தில் இரண்ய கர்ப்பனாகிய பிரமன் தோன்றினன். அவனால் உலக சிருட்டி செய்வித்தனர்.

இவ்வாறு மலரோன் உலக சிருட்டி செய்து வருகையில் ஒரு கற்பத்தில் தனது கண்ணில் மரீசிமுனிவனையும், இதயத்தில் பிருகுவையும், சிரத்தில் அங்கிராவையும், அபானனில் கிருதுவையும், வியானனில் புலகனையும், உதானனில் புலஸ்த்தியனையும், பிராணனில் தக்கனையும், சமானனில் வசிட்டனையும், சுரோத்ரத்தில் அத்திரியையும் படைத்தனன். இவர்களே நவப்ராஜாபதிகள். பின்னும் கழுத்தில் அரக்கரைப் படைத்து அவ்வுடலைவிட அது இருளாயிற்று. இவர் வேறு உடல் கொள்ள அவர்முகத்தில் சத்வகுணம் பிறந்தது. இதில் தேவர் பிறந்தனர். அத் தேகத்தையும்விட அது பகலாயிற்று. வேறு உடல் எடுத்துப் பிதுர்க்களைப் படைத்து அவ்வுடலைவிட அது சந்தியா காலம் ஆயிற்று. பின் வேறு உடல் எடுத்து மனிதரை படைத்து அதையும்விட அது சந்திரிகை ஆயிற்று. மற்றும் பல வுருக்கொண்டு பூதப்ரேதபைசாசர்களைப்

படைத்தனர். மற்றொரு சிருட்டியில் முகத்தில் வேதியரையும், புஜத்தில் அரசரையும், தொடையில் வணிகரையும், திருவடியில் சூத்ரரையும் படைத்தனர். தமோசிருட்டிக்குப் பிறகு இவருக்கு இரண்யகர்ப்பப் பெயர் உண்டாயிற்று. பிறகு ஜலத்தைப்படைத்துண்ண அசுரர் பிறந்தனர். இவருடலில் நாகங்கள் பிறந்தன. அவற்றைக் கோபிக்க இவருடல் பொன்னிறமடைந்தது. முகத்தினும் மார்பினும் வேள்வியின் பொருட்டு ஆடுகள் பிறந்தன. இரண்டு விலாவினும் வயிற்றினும் பசுக்கூட்டங்கள் பிறந்தன. பாதத்தில் சிங்கமுதலிய பிறந்தன. ரோமத்தில் கிழங்கு முதலியன தோன்றின. நான்கு முகத்தினும் நான்கு வேதங்கள் பிறந்தன. இவ்வகை உலகத்தைப் படைத்த பிரமன் தான் படைத்த உலகத்தைக் காக்கக் காவலனை விரும்பித் தனது தமோகுணத்தைப் பிரிக்க அது இருகூறுகிப் பாபமும் கொலையுமாயிற்று. அச்சுயம்புவாகிய பிரமனது உடலில் சுவாயம்புமநுவும், சதரூபையும் பிறந்தனர்.

மேற்கூறிய சுவயம்புவாகிய பிரமனது உடலிற் பிறந்தமையால் இம்மநு, சுவாயம்பு மநுவென்னும் பெயரும் இவன் மனைவி அதி விசித்திரமான அழகுடன் கூடியவளாதலால் சதரூபையென்னும் பெயரும் பெற்றனர்.

# இரண்டாம் அத்யாயம்

## 1. சுவாயம்புமநு

மேற்கூறிய புகழினைப்பெற்ற இச் சுவாயம்புமநு பிரமனுடைய இருகூறாகிய தேகத்தின் ஒரு கூற்றில் பிறந்தனன். இவன் தேவி சதரூபை. இவள், தன் கணவனுக்கு வாழ்க்கைத்துணையா யமைந்து தன்னை நாயகியாகப் பெற்ற கணவன் மனத்திற்குத் தக்கவாறு ஒழுகித் தன் கணவனை தெய்வம் என வெண்ணி,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" — என,

ஆன்றோர் கூறியுள்ளவாற்றை யெண்ணி வருந்தி நமக்குள்ள வெல்லாப் பேறுகளிலும் முதன்மை பெற்றது புத்திரப்பேறேயாம். ஏனைய ஒன்றும் பயனில,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" — எனவும்,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ — வின்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்" — எனவும்,

"தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொருள்
தந்தம் வினையால் வரும்" — எனவும்,

கூறியுளாராதலின், நமக்கு அப்புத்திரப்பேறு வாய்க்கும் காலம் என்று என எதிர் பார்த்திருந்தனள்.

"கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாருநீர் வையக் கணி" — என,

அரசன், மனைவியின் அகக்குறிப்பை,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்" — என,

முகத்தால் அறிந்து, அருங்கயத்தமரா அன்னமே, கோடையில்வாடிய கோதை போலவும், சந்திரனில்லா இரவுபோலவும், மணமிலா மலர் போலவும் நின்முகம், வாடியதற்குக் காரணம் என்ன வென அருகிருந்து வினவலாயினன்.

அப்போது இராஜ மகிஷி அரசனை நோக்கி அரசர்க் கணிகலனாகிய அரசரேறே; நாம் அனைத்துலகும் அரசாண்டும் என்ன பயன்? நமதுவாணுள் முடிந்தபின்னர் கூற்றன் திசையைக்குறித்தே போகவேண்டுமே யெனும் ஏக்கம் என்னை வருத்துகின்றது. எனக் கேட்ட அரசன் திடுக்கிட்டு என்ன என்று வினவினன். சதருநை நமக்கு,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" — என,

இம்மை மறுமைப் பயன்களைத் தரவல்லவர்களும், பிதுர்க் கடன்களை நமக்குப் பின்னர் இயற்றுபவரும் பும் எனும் புத்திரப்பேறடையாதார் பெறும் நரகத்தினின்று நீக்குபவருமாகிய புத்திரர் இன்மையால் வருந்துகிறேன் என்றனள்.

இதைக்கேட்ட அரசன், மனைவியின் மனம்போல் தானும் தன் மனமும் புண்பட்டு,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" — என,

தன் கொலுமண்டப மடைந்து தனக்குச் சூழ்ச்சித் துணைவரா யமைந்த அமைச்சர் புரோகிதரைக் கூய் ஐயன்மீர் !

"தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்" — என,

ஆன்றோர் கூறி யிருத்தலினாலும்,

"கருவியும் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு" — எனவும்,

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" — எனவும்

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு" — என,

தமிழ்மறை கூறு மாற்றானும்,

"செயல்வேண்டா நல்லன செய்விக்கும் தீய
செயல்வேண்டி நிற்பின் விலக்கும் — இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல்" — எனவும்,

பெரியார் பணித்தலாலும் எனது எண்ணத்தை யுங்களுக்கு அறிவிப்பவிண்டு வருவித்தனன் என்றனன்.

பின்பு சுவாயம்புமநு, ஆண்டு வந்த தனது சுற்றத்தினரையும் மற்றவர்களையுநோக்கிப் பின் வருமாறு கூறுவானாயினன். எம் குலத்தலைவர்கள் சூரியனைக்காட்டிலும் தம் குலம் விளக்க முறும்படி இந்தப் பூமியை முடிமேலேற்று நெடும்போது தாங்கி வந்தனர். அவர்களுக்குப் பின்னும் சந்ததி கெடாது யானும் அவர்களைப்போல் வேதநெறி பிறழாமல் உலகத்தைக் காத்து வந்தேன். இதுகாறும் எழுபது சதுர் யுகங்களாயின. இதுதனையும்

பகைவரை யொடுக்கி யுலகையாண்டனன். எனக்குப் பிறிதொரு குறையில்லை யெனக்குப்பின் வையகம் புத்திரப் பேறின்மையால் புன்கணடையு மென்பதாகிய கலக்கமும் அருந்தவமுனிவரும் அந்தணாளரும் வருத்த மிலாது இதுகாறும் நல்வாழ்வில் வைகினர்; எனக்குப் பின் அவர்கள் பெருந்துன்பத்தை அடைவரே என்கிற கலக்கமும் என் மனத்தை வருத்துகின்றன. ஆதலால், தவஞ்செய்வான் எண்ணினேன் என்று கூறினன்.

இதைச் செவியுற்ற பழைய குடிப்பிறப்பினரும், கலைகளின் குழாமாகிய நூற்கேள்விகள் நிரம்பப் பெற்றோரும் நலமுதற் பொருள் நலியினும் நடு நிலைமை தவறாதவரும், வெகுளியின் வேர்களைந்து தருமத்தைத் தாங்கினவரும், இருப்பைக்கொண்டு இனி வருபவைகளைத் துணிந்து கூறும் ஆற்றலுள்ளாரும், அது தம் இருவினையால் வந்த தாயினும் மாற்றும் வன்மையுள்ளவரும், பிறப்பினால் மேம்பாடுடையாரும், அறிவிற் பெரிய நூற்கேள்விகளை யுடையாரும், மானத்தினால் கவரி மானையும் அசுணப் பறவையையும் வென்றவரும், காலம் இடம் ஏற்ற கருவிகளும் தெரிந்து தாம் கற்ற நூற் கேள்விகளை நுட்பமாக ஆய்ந்து தருமங்குறிக்கும் மேலோரும், சீலமும் புகழ்க்கு வேண்டும் செயல்களுந்தெரிந்து தம்மிடம் வரும் இலாபங்களைத் தம் தலைவருக்குதவுந் தகுதியுடையாரும், தங்களுயிர்களுக் குறுதிதேடாது தலைமகனாகிய அரசன் வெகுண்டகாலத்தும் அவனது சீற்றத்தை யொருபால் தாங்கிக்கொண்டு நீதியை விடாது கூறும் திண்மை யுடையாரும், நடுவு நிலைமையினின்று விலகுதலிலாத தேற்றமுடையாரும், மூன்று காலத்தில் நேருங் காரியங்களை யறிவாலாய்ந்து கூறும் அறிவுளாரும், ஒரு காரி

யத்தை ஆராய்ந்து கூறுமிடத்து எல்லாரும் ஒருமித்த முடிவுடை மொழிகூறும் வலியுள்ளாருமாகிய மந்திரியர், அரசற்கு ஆக்கங் கருதினவராய் அரசன் தம்மை விட்டுப் பிரியும் என்னும் விசன மொருபுறமும், அரசனுக்குப்பின் சந்ததியுண்டாமென்னும் ஆனந்த மொருபுறமும் இழுக்கத் துணிந்து அரசன் எண்ணத்தின்படியிசைந்தனர்.

பின்பு அரசன், தான் தாங்கிய பாரின் பாரத்தை யமைச்சரிடம் சுமத்தித் தன் கற்பி னீங்காக் கருங்குழலாகிய சதரூபையுடன் தவமேற்கொண்டு நகர் நீங்குகையில் செவியுற்ற புரசனங்கள், அரசனையண்மி அரசனது பிரிவிற்கிரங்கி,

"ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே — பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றுர் தங்கண்ணி
னீர்வார்த்துக் கால்கழுவா நின்று"

எனத் துன்புற்றனர். அரசன் நகர மாக்களை நோக்கி, யஞ்சாதீர் நான் சிறிது நாட்களில் மீண்டு வருகிறேன் என ஆறுதல் கூறி, அண்டுதற்கரிய அரணியம் செல்லத் தொடங்கினன்.

சுவாயம்புமநு, வானவரும் வணங்கத்தக்க ஒழுக்கமுடையவனுய் மனைவியுடன் மரவுரியுடுத்துச் சடைமுடி பூண்டு தண்டுக மண்டலந் தரித்து இரண்டு பக்கங்களிலு மரங்கள் நெருங்கி மிருகங்களும் நுழைய முடியாத காடுகளையும், சிங்கங்கள் யானைகளுடனும் புலிகள் கரடிகளுடனும் வெகுண்டு போர்புரிகின்ற மலைச்சாரல்களின் பக்கங்களையும், வெவ்விய பேய்க் கணங்களும் பூதத்தினங்களும் இயக்கர்களும் வசிக்கும்

பொறைகளையும் நீங்கி யுத்தர திசைநோக்கிச் சென்றான். அத்திசைக்கண் எல்லாமலைகளுக்கும் இறைமைபூண்டு ஓங்கிச் சிவபிரான் திருமேனிபோல் பனியால் மூடப் பட்டு வெள்ளென நிற்கும் இமயகிரி யடைந்து, பத்தி யுடன் அம்மையைப்பயந்த அருட்பெருங்குன்றமென அதனைப்பலமுறைப் பணிந்தெழுந்து, அவ்விடம் ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்னி முதலிய வளர்த்துத் தவத்தையே தனமாகக் கொண்டிருப்பவராகிய முனிவர்களை வணங்கிப் பஞ்சாங்க அஷ்டாங்கமாகத் தண்டனிட்டு அவர்கள் எழுக என எழுந்து நின்றான்.

அவ்வாறு நின்ற தவவொழுக்க முடையானாகிய சுவாயம்புமநுவை நோக்கிய முனிச்சிரேட்டர்கள், அரசனுக்கு அர்க்கியபாத்யாசன ஆசமன்யாதிகள் அளித்து நின்வரவு நல்வரவாகுக என அவன் வந்த செய்தியை விசாரித்தனர். அரசன், முனிவர்களை அஞ்சலிசெய்து தான் வந்த வரலாற்றைக் கூறினான். முனிவர்கள் கேட்டு ஆனந்தம் அடைந்து உன் எண்ணம் ஆங்காலம் இது ஆதலால், உனக்கு எல்லாக்கிரியைகளும், எண்ணிய வெண்ணியாங் கெய்தும். ஆதலால், நீ சுவயம்புவாகிய பிதாமகனை யெண்ணித் தவஞ் செய்கவென்று, கூறி விடைதந்தனர்.

பின் மநு, தன் கற்பினி ஏவல் செய்யத்தான் ஒரு பர்ணசாலை யமைத்துக்கொண்டு மனைவி யொருசாரும் தான் ஒரு புறமும் சில நாள் சருகு புசித்தும், சிலநாள் நீரருந்தியும், சில நாள் அமுத கிரணனது கிரணங்கண்ட போது அதிகளிப்புடன் அள்ளியுண்ணும் சகோரம்போல யோகாமிர்ததாரையுண்டும், வாயுமுதலியவைகளைப் புசித்தும், சிலநாள் ஒரு காலை யூன்றி நின்று நின்றதாளின்

தொடைக்கிடையில் ஒரு தாளை யூன்றி ஆகாயத்துடன் அலர்கதிராகிய சூரியனைப் பிடிக்கச் செல்பவன்போல் இரண்டு கரங்களையும் நீட்டிக்கொண்டு, ஒன்றையும் நினையாமல் பிரமனையே மனதில் நினைத்துக்கொண்டு, இரண்டு தாரை வாய்ந்த கண்களும் ஆயிரங் கதிர்களை யுடைய பனிப் பகைவனைத் தாமரைப் போதுபோல் நோக்கி நின்று அங்கியை அங்கியால் வெதுப்பி வெப் பத்தை வாயுவாற் போக்கிச் சிரத்தை அமுதினால் குளிர்ச்சி யடைவித்து இவ்வாறு அநேக காலம் நினைவு வேறறப் புலன்களாகிய யானைகளை யறிவெனு மங்குசத்தா லடக்கித் தவம் புரிந்தனன். இவ்வாறு தன்னை யெண் ணித் தவம் புரியும் குமரனுடைய தவத்திற்கிரங்கிப் பிரமதேவன், காயத்ரி சரஸ்வதியருடன் தரிசனந்தந்து குமரனைநோக்கி ஆசிவசனங்களைக்கூறிக் கரத்தால் உடம் பினைப் பரிசித்து எழுப்பினன்.

அரசனும், யோக நீங்கித் தான் மனதில் நினைத்த பொருளைக் கண்கூடாக எதிரில் கண்டு ஆனந்தக் கண் ணருவிபாயத்தொழுது நின்று உடல் பூரிக்க நெஞ்சந் தழுதழுக்கத் தடக்கை கூப்பித் துதித்துக் குறை கூறி வேண்டினன்.

நான்முகனுந், தான்முகமாய்க் குமரனை வாழ்த்தி, யுனக்கு நல்ல சந்ததிகளுண்டாம் என வரம் அளித்து, இனி நீ உன் இராச்சியத்தைச் சின்னாளாண்டு, நற்கதி யுறுகவென வரமளித்து மறைந்தனன்.

இன்புறு நிலைகண்ட அரசன், தன்னில்லாளுடன் நகரேக எண்ணமடைந்து, ஏவலவரைக்கூய்த் தன் வரு கையை அமைச்சருக் கறிவித்தனன். செய்தி யறிந்த

அமைச்சர் முதலினோர், முரசமாக்களை விளித்து அருந் தவம் புரியச்சென்ற அரசன் நாளை நகரடைவன் என முரசறைகவென பணித்தனர். நகர மாக்கள், தங்களை யறியாத களிப்பின் மூழ்கினவராய் இளையாரும் முதியோரும் கிளைஞரும், நட்பினருமாய்ப் பகற்பொழுதும் இரவும் எவ்வாறு கழியுமெனச் சிலர் தோரண நடுகின்றவரும், தூண்களைச் சித்திரங்களால் அலங்கரிப்பவரும், பூரண கும்பங்களை வரிசையுடன் அணிவிப்பவரும், குடை, சாமரம், கண்ணாடி, கொடி, இணைக் கயல், தோட்டி, முரசு, விளக்கு முதலிய மங்கலப் பொருள்களை, முறை முறை நிறுத்துபவருமாய் அரசனை யெதிர்கொண்டு சென்று நகரத்து அழைத்து வந்தனர்.

தோன்றலும், மனைவியுடன் அருந்தவ முனிவரும் மந்திரியர் முதலிய அரசச் சுற்றத்தவரும் மங்கலங்கூறிப் பல்லாண்டிசைப்ப மங்கல தூரியமுழங்க அரண்மனை புகுந்து சின்னாளரசாண்டு சுபமுகூர்த்தத்தில் ஒரு ஆண் மகவு பெற்றனன். அரசன் புரோகிதரை விளித்து விதிப்படி ஜாத கருமாதிகள் முடித்துப் பிரிய விரதன், எனப் பெயரிட்டனன். பின் மநு, அரும் புதல்வனது பிள்ளைமை விளையாட்டாகிய செங்கீரை, தால், சப்பாணி முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் முதலிய பருவ விளையாட்டுகளைக் கண்டு களித்து, அவனது ஐந்தாமாண்டில்,

"தந்தை மகற்காற்று முதவி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

எனக் கூறி யிருத்தலாலும்,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து" — எனவும்,

"ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்
ஆற்றுணு வேண்டுவ தில்" — எனவும்,

"கற்றார்க்குத் தம்மூ ரென்றூ ரில்லை" — எனவும்,

"மன்னனு மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு" — எனவும்,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" — எனவும்,

"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்" — எனவும்,

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தான்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்" — எனவும்,

பெரியார் கூறுதலாலும் குமரனை நல்லாசிரியத் தன்மை பூண்ட ஆசிரியர்களைக் கொண்டு கல்வி யறிவுறுத்தினன். பின்னர் சுவாயம்பு மநு, தனது வாளை யுறையில் நிறுத்திப் பகைவரை யச்சுறுத்திச் செங்கோல் செலுத்தி வந்தனன்.

இவ்வாறு தனது முறை வழாமல் செங்கோல் கடாத்தி வருங் காலத்தில் தேவநாடு அசுரரால் பீடிக்கப்

பட்டுத் தேவர்களனைவரும் விண்ணாடு விட்டு மண்ணாடு அடைந்தனர். இந்திரனும், அசுரரை வெல்ல மந்திர மறியாது அந்தரம் விட்டுத் தந்திரமாய்த் தப்பினன். பின்னிட்ட அமரர், சுவாயம்பு மநுவிடம் வந்து ஆசிகூறி யரசனை யடைக்கல மடைந்தனர். அரசனும், தேவர்களை நோக்கி அமரர்களே என்னை யடைக்கலம்புக்க வுங்களைக் காவாது இந்த வுடலை என்பொருட்டு வோம்புவனோ? முன்னர் விருத்திராசுரனுக்கு அஞ்சி நீங்களும் உங்கள் தலைவனாகிய இந்திரனும் ததீசி முனிவரைச் சரண்புக்க காலத்து அவர் அடைக்கலந் தந்து தம் முதுகெலும்பைப் பொருட்படுத்தாது கொடுக்க வில்லையா? இந்தத் தேகம் உயிருடன் கூடிய காலத்தே போற்றத் தக்கதாம். இதி லுள்ள கூத்தன் காலவயத்தா னீங்கிய காலத்து எவ ராலும் இகழப்பட்டதே யாம்.

"நாய்நம தெனநரி நமதெனப் பிதா
தாய்நம தெனநமன் தனதெனப் பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை-யாரதே" — எனவும்,

"விடம்பயி லெயிற்றர வுரியும் வீநுழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத் தேகொலாம்
நடம்பயில் கூத்தரி னடிக்கு மைவர்வாழ்
உடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ" — எனவும்,

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்" — எனவும்,

பெரியார் யாக்கை நிலையாமை கூறி யிருத்தலானும், அடைக்கலம் புக்கவரை ஆதரித்தலினும் பெரும்பேறு வேறின்மையானும், பூர்வம் மிருகண்டு புத்திராகிய

மார்க்கண்டேய முனிவர், தாய் தந்தையரால் சமக்குப் பதினாறுமாண்டில் ஆயுள் முடிவெனக் கேட்டுச் சிவ பூசை கடைப் பிடித்து வருகையில் பதினாறுவதாண்டின் முடிவில் காலன் வரக்கண்டு வெருவிச் சிவமூர்த்தியைச் சரண் அடைந்து வேண்ட, கிருபாநிதியாகிய சிவ பெருமான் சிவலிங்கத்தினிடம் வெளிப்பட்டு, யமனை யுதைத்து மார்க்கண்டரைக் காத்துக் காலகாலப் பெயர் பெற வில்லையா ?

சிபி யெனும் சூர்ய குலத்தரசன், தன்னை யடைக் கலம் புக்க புறுவொன்றின் பொருட்டாகத் துலைபுக்குத் தன்னுடலை யரிந்தீந்து சுவர்க்க மடையவில்லையா ? தேவர் களும் அசுரர்களுங் கூடிக் கிருத யுகத்தில் பாற்கடலில் அமிர்த மதனஞ் செய்கையில் அதினின்று விஷம் தோன்றியது. அதனது சுவாலா வேகம் ஆற்றாது தேவாசுரர் சிவபிரானை யடைக்கலம்புக அபயந் தந்து விஷபானஞ் செய்து நீலகண்டத் திருநாமம் பெற வில்லையா ? வேடன் ஒருவன், கண்ணி வைத்துப் பெண் புறுவைப் பிடித்துக் கொண்டு ஆண் புறுவைப் பிடிக்க வந்த அந்த வலையனுக்குக் குளிரின் பொருட்டுத் தீக்காய் வித்துக் குளிர் நீங்கிய பிறகு அவனது பசியின் பொருட்டு அதிதியா யடைந்த அவனுக்குத் தீயில் விழ்ந்து பசிப்பிணி போக்கி ஆண் புறவு மறுஜன் மத்தில் அரசனாக வில்லையா ?

கெஜேந்திரன் எனும் யானை யொன்று, பூசையின் பொருட்டுப் பூக்கொய்யச் சென்று தடாகத்தில் இருந்த முதலையிடம் பிடிபட்டுப் பல நாள் போரிட்டு அவல மடைந்து திருமாலை யபயமிடத் திருமால் அபயந்தரத் துன்ப நீங்கி மோக்ஷமடைய வில்லையா ?

தசகண்டனாகிய இராவணன், ஜாநகியை யிலங்கைக்குக் கவர்ந்து போக வெண்ணித் தவவேடம் பூண்டு யாசித்துத் தேரின் மீது தூக்கிச் செல்லுகையில் பயந்த ஜாநகியா ராங்குள்ள சராசரங்களை நோக்கிச் சரணெனக்கியார்கொலென்று அழுது தேம்பக்கண்ட ஜடாயு பக்ஷி யானுனைக் காப்பே னஞ்சலஞ்சலென்று அருளினெய்தி முரண்கொண்ட மனத்தனாகிய இராவணனுடன் போரிட்டுச் சுவர்க்க மடைய வில்லையா ?

இராவணனது கூடா வொழுக்கத்திற் கஞ்சிச் சரண் புக்க விபீஷணனுக்கு அவன், பகைவனுடன் பிறந்தான் என்றும் எண்ணாமல் தம்பிமார் முதலியவர்களையும் நோக்காமல் காரியம் ஆயினும் ஆகுக அன்றேல், நான் தோல்வி பெறினும் பெறுக அன்புளார்க்குச் சிரிய தன்மை யஞ்சினவர்க்கு அபயம் தருதலினும் வேறுண்டோ அடைந்தவர் தாழ்ந்த குணமுள ராயினும் நம்மை அடைக்கலமென அடைந்த வர்க்குத் தம் உயிரையேனும் கொடுத்துக்காத்தல் அறமென்று அடைந்தவனை நோக்கி வேதம் உள்ளளவும், வேதகீதம் உள்ளளவும், பாரிசாதம் உள்ளளவும், பஞ்சபூத முள்ளளவும், கார் உள்ளளவும், கடல் நீருள்ளளவும், ஈரேழ் பாருள்ளளவும், என்றன் பேருள்ளளவும் இந்த லங்காபுரி ராஜ்யம் தந்தேனபயம் இந்தா இந்தாவென்று இராமபிரான் அபயந் தரவில்லையா ?

“உய்யலுற் றபய மென்று
னுயிரைத்தன் னுயிரி னேம்பாக்
கையனு மொருவன் செய்த
வுதவியிற் கருத்தி லானும்

ஐயறு முறையி னோக்கி
　　யருமறை வழக்கி னின்ற
மெய்யினைப் பொய்யென் றூனு
　　மீள்கிலா நரகில் வீழ்வார்" — எனவும்,

"ஆதலா னபய மென்ற
　　பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பா டென்ப
　　வியம்பினீ ரென்பால் வைத்த
காதலால் இனிவே றெண்ணக்
　　கடவ தென்" — எனவும்,

ஆதாரம் கூறித் தேவவுலகஞ் சென்று தேவசேனைகளைக் கூட்டி அவுணர் சேனைகளைக் கிட்டிச்சென்று இடியேறு போலார்த்து அமரர்கோனுக்கு வெற்றி கூறிக் கையில் விற்பிடித்து நாணோசை பூரித்து வில்லிற் பல தேவாஸ்திரங்களைப் பூட்டியெய்தும் சஸ்திரங்களால் வதைத்தும் அசுரர்களைப் புறங்காட்டி யோடச்செய்து மீண்டும் அசுரர்களால் துன்பம் நேராதபடி இந்திரனுடன் நூறு ஆண்டு உடனிருந்தாண்டு தன்னகர் வந்து சேர்ந்தனன்.

இதற்குப் பிறகு சுவாயம்புமநு, உத்தான பாதன் எனும் குமாரனையும், பிரசூதி, ஆகுதி, தேவஹூதி யெனும் மூவர் குமரியரையும் பெற்று மீளா வுலகம் புக்கனன். இனி இவனது குமாரனாகிய பிரிய விரதன் சரிதையைக் கூறுவோம்.

## மூன்றும் அத்யாயம்

இவன் தான், பருவமடைந்து பிதாவால் அரசாட்சியைக் கைக்கொண்டான். இவனுக்கு இரண்டு மனைவியர். இவன் பிரமனாலும், நாரதராலும் ஞான உபதேசம் பெற்றவன். இவன் முதல் மனைவி பெரிகிஷ்மதி அல்லது சுகன்னி; குமார் ஆக்னியித்ரன், இத்மசிக்வன், எக்யபாகு, மகாவீரன், இரண்யரேதஸ், கிருதபிருஷ்டன், சவநன், மேதாதிதி, விதிகோத்ரன், கவி, ஒரு பெண் ஊர்சல்வதி, இவனுக்கு மற்றொரு மனைவியிடம் உத்தமன், தாபசன், ரைவதன், என்போர் பிறந்தனர். இவனது குமார் பிறப்பினை மற்றொருவிதமும் கூறுவர். இவனுக்குச் சுகன்னியிடம், சம்ராட், குக்ஷி என இரண்டு மக்களும், ஆக்னியித்ரன், அக்னிபாகு, வபுஷ்மந்தன், தியுதிமந்தன், மேதை, மேதாதிதி, அவ்யன், சவநன், புத்ரன், சோதிஷ்மந்தன், எனும் பதின்மர் குமரரும் பிறந்தனர். இவர்களில், மேதை, புத்ரன், அக்னிபாகு, மூவரும் அரசாட்சி வெறுத்து யோகிகளாயினர்.

மேற்கூறிய குமரர்களில் ஆக்னியித்ரன் சம்புத்தீவையும், மேதாதிதி பிலக்ஷத் தீவையும், வபுஷ்மந்தன் சான்மலித் தீவையும், சோதிஷ்மந்தன் குசத் தீவையும், தியுதிமந்தன் கிரௌஞ்சத் தீவையும், அவ்யன் சாகத் தீவையும், புஷ்கரன் புஷ்கரத் தீவையும் ஆண்டனர்.

பிரிய விரதன் பதினொருகோடி வருஷம் அரசாண்டான். இவன் ஏழு முறை சூரியனுக்குப் பின் இரதத்துடன் சென்று உபதேசம் பெற்றான். இவன் தேர்ச் சக்கரம் அழுந்திய காரணத்தினால் ஏழு பள்ளங்கள் உண்டாயின. அப் பள்ளங்களே சத்த சமுத்திரங்களாயின. அச் சமுத்திரங்களில் ஏழு தீவுகள் உண்டாயின. அவற்றிற்கு இவன் குமாரர்களே அரசராயினர்.

ஆக்னியித்ரன் பிரிய விரதன் குமரன், இவன் தேவி பூர்வசித்தி. இவன் இவளுடன் பிரியா திருந்து வருஷந்தோறும் ஒவ்வொரு குமாரரைப் பெற்றான். அவர்களாவார், நாபி, கிம்புருஷன், அரிவருஷன், இளாவிருதன், இரம்யகன், இரண்மயன், குரு, பத்ராசுவன், கேதுமாலன் முதலியோர். இவர்களால் நவ வருஷங்க ளுண்டாயின. பிரிய விரதன் குமரர்களிற் சிலர் யோகிகளாயினர்.

ஊர்ச்சஸ்வதி பிரிய விரதன் பெண். சுக்ரன் தேவி, யயாதியின் பாரியாகிய தேவயானிக்குத் தாய். இனிச் சிறிது தேவயானியின் சரிதையைச் சுருங்கக் கூறுவாம். அழகிற் கணங்காகிய தேவயானி, விருஷபர்வா வென்னும் தானவேந்திரனது குமரியாகிய சன்மிஷ்டையுடனும் மற்றும் பல கன்னியருடனும் வசந்தகாலத்து வண்டுகள் பாட நறுமலர் பூத்துப் பரிமள மிகுந்த நந்தன வனத்துப் பளிங்குபாவிய நீரோடையில் நீர் விளையாட்டைக் கருதிச் சென்றனள். மேற்கூறிய பெண்கள் அந்நீராடுவான் அமைந்த தோற்றம், பூர்வத்தில் துருவாச முனிவரின் சாபத்தால் இந்திரனுடைய மாநிதிகளாகிய அரம்பையர் கூட்ட முதலியவை திருப்பாற் கடலிற் போய் விழுந்ததை யொத் திருந்தது.

அவ்வரிவையரிற் சிலர், தமது செவ்விய கால்களுக்குச் சமானமான தாமரைத்தாள்களை மார்பிற் பொருந்தத் தழுவிக் கொள்பவரும், ஒருவர் தோள்களை யொருவர் பற்றி நீரின் மேற்றோன்றி விஜயலக்ஷ்மிபோல் விளங்குவாரும், தெங்கின் பாளை விரிந்தது போல் நீரைத் தம் கைகளால் ஒருவர் மேல் ஒருவர் உந்துவாரும், அந் நீரைக் கையாலுந்துவதால் அஞ்சிய வாளை மீன்கள் தங்கள்மீது பாய்வதால் பயந்து ஒருவரை யொருவர் தழீஇக் கொள்பவரும், ஒளி நிறைந்த பவளங்களையும், ஆதொண்டைக் கனிகளையும், தாமரைகள் விரிந்திருப்பதை யொத்த முகங்களையும், அழகிய செங்குவளை யொத்த வாய்களையும், வாள் போலுங் கண்களையும், இல்லையெனக் கூறும்படியான இடைகளையும், கரும்பை யொத்த மொழிகளையும் பெற்ற சில மங்கையர் அந் நீர் நடுவில் உலாவுங் கயல் மீன்களின் பிறழ்ச்சியைக் கண்டு ஓடு நீர்த்தடங்களுக்கும், கண்கள் உளவோ வென்று ஐயமுற்று வினவுவாராய் நீராடுகையில், ஆகாய வழியில் நீசன் ஒருவன், விமானத்து வருதல் கண்டு அனைவரும் திடீரென வெழுந்து சேலையை யுடுத்திக் கொண்டனர். பின் தேவயானியின் பிரிய சகியாகிய சன்மிஷ்டை அரச கன்னிகை யாகையாலும், நாண மிகுதியாலும், மறப்பால்,

> "இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
> உவகை மகிழ்ச்சியிற் சோர்வு" — எனவும்,
>
> "பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
> தெப்பானூ லோர்க்குந் துணிவு" — என்பவாதலின்,

வேதியக் கன்னிகையாகிய தேவயானியின் துகிலை எடுத்துத் தான் உடுத்துக் கொண்டனள். அப்பால் நீரி

னின்று எழுந்து சேலை யுடுத்தற்கு வந்த தேவயானி தன் துகிலை, சன்மிஷ்டை யுடுத்தி யிருக்கக் கண்டனள்.

கண்ட தேவயானி, கோபங்கொண்டாளாய் எடி சன்மிஷ்டை, உம்பர்தம் உணவாகிய அமிர்தத்தை நாவினல் நக்கி யுண்ணும் நாயைப் போல எனது சேலையை நீ உடுத்தல் தகுமா வென்று கோபித்தனள்.

இதனல் சன்மிஷ்டை நடுநடுங்கி நான் அறியாது செய்தேன் அம்மணி ;

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் தலை" — எனவும்,

"ஒறுத்தாரை யொன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து"—எனவும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" — எனவும்,

மேலோர் கூறி யிருத்தலால் நான் செய்தது பிழை யேனும், அதனை யுளத்திற் கொளாது பொறுத்தல் வேண்டும். கோபம் எக்காலத்தும் தீமை விளைக்கும். அது தாமத விருத்தியே செய்து கொண்டாரைக் கெடுக்கும். ஆதலால், கோபத்தை விடல்வேண்டும்.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனன் வரும்" — எனவும்,

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்" — எனவும்,

"இணரெரி தோய்வன்ன வின்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று" — எனவும்,

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால் — ஒறுத்தாற்றின்
வானேங்கு மால்வரை வெற்ப பயனின்றே
தானேன் றிடவரும் சால்பு" — எனவும்,

பெரியார் கூறி யிருக்கின்றனர். நானே வும்முடன் கூடி விளையாடுபவள்; யான் அறியாது செய்த காரியத்தைப் பொறுத்தல் வேண்டும். அவ்வாறே, நீதிகளை யெடுத்துச் சொன்ன அந்நூலாசிரியர்கள் நட்பிற் பிழை பொறுத்தல் தக்கதென,

"இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப் [னெடு
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் — பொன்
நல்லிற் சிதைத்ததீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தி லாக்குத லால்" — எனவும்,

"இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னார் துறத்த றகுவதோ — துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்று தங் கை" — எனவும்,

பல நீதிகளை யெடுத்துக் கூறினள்.

தேவயானி, "மூர்க்கரு முதலையுங் கொண்டது விடார்" எனுமுதுமொழிபோல் நெருப்பினுள் நெய்விட்டாங்குகனன்று, அரச கன்னிகையைத் தான் குரு மகள் எனும் எக்கழுத்தங் கொண்டு வைவாளாயினள். இதனால் சினங்கொண்ட சன்மிஷ்டை, "கடுகு செத்தாலும் காரம் போகாது" நாம் இனி இவளைச் சும்மா விடுவதில்லை. இதுகாறும் குருவின் மகள் எனக் கண்ணேடினேம். "கங்கையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்சுரையாமா?" "கங்கையின் மூழ்கினும் காக்கை அன்னமாகுமா?" "ஓடியோடிப் பறந்தாலும் ஊர்க்குருவி

கருடனாகுமா ?" நம்மிடம் எற்றுண்டு வாழ்பவன் மகளுக்கு இவ்வளவு அகங்காரமா வென,

"தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை யவரொடு பட்டது — புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும்" — என,

துணிவு கொண்டு, "வந்த சண்டையை விடுவதில்லை, வலிய சண்டைக்கும் போவதில்லை" இனி, வந்தது வரட்டும் என்று, தேவயானியை ஒரே பிடியாகப் பிடித்து அவ்விடத்திருந்த பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தனள்.

கேட்டீரோ அறிவுடையாரே! அரசன் மகள் எவ்வளவோ நீதி கூறியும், இவள் கேளாததினால்,

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்பதற்கேற்ப, மானம் பொறாது, இவ்வாறு செய்தனள். இது இவ்வாறு இருக்கச் சந்திர வம்சத்து நகுஷன் எனும் அரசன் குமரன் யயாதி யென்போன், வேட்டை மேற்சென்று விடாய்த்து வழியிலிருந்த கிணற்றருகில் நீர் வேட்கையாற் செல்ல அக் கிணற்றில் பாற்கடலில் தோன்றிய பங்கயச் செல்விபோல் தேவயானியை நிர்மானமாக் கண்டு, தன் உத்தரீயத்தை யுடுக்கச் செய்து, வரலாறு வினவி, அவளைக் கிணற்றினின்று மேலெடுத்து, அவளது நடுக்கந் தீர்த்துத் தந்தையிடம் அனுப்பினன்.

தேவயானி நடந்த செய்திகளைத் தந்தைக்கு அறிவிப்ப, சுச்ரன் மிகுந்த கோபமுடையனாய் விடபன்ம

னிடங் கூறி, நாட்டைவிட் டகன்றனன். விடபன்மன், தனயையைத் தோழியரால் வருவித்து நடந்தவை களை வினவிக் குருவை க்ஷமை கேட்டுக் குமரியை நோக்கி நீ இன்று முதல் தேவயானிக்கு அடிமைத் தொழில் புரிந்து, சீவிக்க வெனக் கட்டளை இட்டு அனுப்பினன்.

பின்பு தேவயானி, நான் யயாதியால் பரிசிக்கப் பட்டேன். ஆதலால், அவனுக்கே என்னை மணஞ்செய் விக்க எனத் தந்தையிடங் கூறத் தந்தையும் அவ்வாறே அரசனுக்குச் செய்தி கூறினன். யயாதியும், தேவயானி அந்தணர் அரிவை நானோ க்ஷத்ரிய குலத்துதித்த வன் இம்மணம் பொருந்துமோவென இச் செய்தியை மகளுக்கு வெள்ளி கூறினன். தேவயானி அரசனை நோக்கி, நான் க்ஷத்ரியனுக்கே வாழ்க்கைப்படல் வேண் டும் என்றனள். அரசன் காரணம் கூறல் வேண்டும் எனத் தேவயானி கூறத்தொடங்கினள். தேவகுரு வாகிய வியாழன் குமரன் கசன் என்பான், தேவர்கள் பல முறை அசுரர்களை மந்திராஸ்திரங்களினால் சேதித் தும் மீண்டும் மீண்டும் அவர்கள் உயிர்பெற்று உயிர் பெற்று யுத்தத்திற்கு வருகின்றனர்.

இதற்குக் காரணம் என்னவென்று கசன் தேவர் களைவினவத் தேவர்கள் கூறுவர். சுக்ரன், பல நாள் தவம் புரிந்து சிவபிரானிடம் மிருத்துஞ்ஜய மந்திரம் பெற்றான். அம் மிருத்துஞ்சய மந்திரம் இறந்த உயிரை மீண்டும் தருவது. இம்மந்திர பலத்தினால் அசுரர் தேவர்களை வருத்தி வருகின்றனர் என்றனர். இதைக்கேட்ட கசன், அம் மந்திரத்தை நம்மில் யாரேனும் சுக்ரனிடமிருந்து பெறல் வேண்டும். அதற்

குத் தக்கவர் இப்போதே புறப்பட வேண்டும் எனத் தேவர்கள், இக் காரணத்தை யாராயத் தொடங்கிய நீயே அக் காரியத்தை முடித்தல் தகுதி யென, மற்ற வர்களும் அவ்வாறே ஆகுக எனக் கசனும் உடன் பட்டனன்.

அவ்விடம் விட்டு நீங்கிய கசன், தந்தையிடம் வந்து நடந்தவைகளைக் கூறித் "தந்தை சொன்மிக்க மந்திர மில்லை" யென விடைபெற்று நன்னிமித்தம் நோக்கிச் சுக்ரனிடஞ்சென்று குளிரால் வருந்துவோன் அழலை விட்டு நீங்காதது போலவும், கோடையால் வருந்துவோன் நிழலைக் கண்டது போலவும், "அழலி னீங்கானணுகா னஞ்சி, நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோ, டெத்திற மாசானுவக்குமத்திறம், அறத்திற் றிரியாப்படர்ச்சி வழி பாடே" என்பதுபோல வழிபாடுசெய்து வருகையில் அசுரர் பலர், இவனது ஒழுக்கத்தால் இவன் தேவகுரு வின் மகன் இவனது வருகை நமது தீங்குக்குக் காரண மாகும் "பச்சையுள்ள இடத்தில் பசுமேயும்" என்பது போல் நம் ஆசாரியனிடம் இருக்கும் மிருத்துஞ் செய மந்திரத்தினைக்கவர வந்தவனேயாவன் இது நமக்கு வோர் தீக்குறி,

"நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் — தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி" — என,

நல்லாசிரியர்கள் நவின்றுள்ளார்கள். ஆதலினால், பகை வனிடத் திருந்து வந்த ஒற்றனைக்கொண்டு இவனை மந்திரம் பெறாவண்ணஞ் செய்யவேண்டும் எனத் தீர் மானித்தனர்.

இது இவ்வாறிருக்கக் கசன், மிக்க குணசீலனய்,

“ஒழுக்கமன் பருளா சாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவந் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
யழுக்கிலாத் துறவ டக்கம்
அறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா வறங்க ளாஞ
லிரங்குவான் பணி யறங்கள்” — எனவும்,

“இளேயா னடக்க மடக்கம் கிளேபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய — னெல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை” — எனவும்,

தான் கொண்ட எண்ணம் முடியுங்காறும்,

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணயி ஞர்” — என,

கால நோக்கிக் குருபணி செய்து ஒழுகினன். இவனது ஒழுக்க முதலியவைகளேக் கண்ட நான், இவனிடத்து அன்பு பூண்டு, இவனே என் கண்மணிபோற் காத்து வந்தேன். அசுரர்கள் இவனே நோக்கி “இனமினத்தைக் காக்கும் வேலி பயிரைக்காக்கும்” என்பது போல் இவன் தேவயானியால் சீராட்டப் படுகின்றனென் றுணர்ந்து ஒரு நாள் கசன் ஓமதேனுவைக் காட்டில் மேய்த்துக் கொண்டிருக்கையில் கொன்றனர்.

அசுரரால் கசன் கொலேயுண்டதை யறிந்த நான், என் தந்தையிடஞ் சென்று கூறி, மிருத்யுஞ்சய மந்

திரத்தால் கசனை யுயிர்ப்பித்துப் பாதுகாத்திருந்தேன். அசுரர்கள், இனி இவனைக் கொல்லும் வகை ஆராய வேண்டுமென வெண்ணி, நமது ஆசாரியன் கள்ளுண் பதில் பிரியப்பட்டவன். ஆதலால், நாம் இவனைக் கொன்று நீருக்கி யந்நீற்றைக் கள்ளில் கலக்கி யுண்பிப் போம் எனின்? ஆசாரியன் வயிற்றுள் புகுந்த இவன் மீண்டு வருதல் அருமை. அவ்வாறு மீண்டு வருவ னேல் ஆசாரியன் உயிருக்கு இறுதி வருமெனத் தேர்ந்து, ஓர் நாள் கசன் வனத்தில் ஓமதேனுவை மேய்த்துக் கொண்டிருக்கையில், அவனைப் பிடித்துக் கொன்று தீயி லிட்டு நீருக்கிக் கள்ளுடன் கலந்து என் தந்தைக்குக் கொடுத்தனர். சுக்ரன் உண்டு களித்து உறங்குகையில், ஓமதேனுவிற்குப் பின் சென்ற கசன் வாராமை கண்ட நான் ஓடித்திரிந்து வனமெங்குந் தேடிக் காணாது வந்து தந்தையிடங் கூறினேன். பார்க்கவன் கசனிருக்கும் இடத்தை யோக நோக்கால் நோக்குகையில், அவன் தன் வயிற்றிலிருப்ப துணர்ந்து ஓகோ! கள்ளல்லவா இப்பழி விளைவித்தது என்று சற்றுச் சிந்தித்து,

"ஒளியு மொளிசான்ற செய்கையுஞ் சான்றோர்
தெளி வுடையரென் றுரைக்குந்தேசும் — களியென்னும்
கட்டுரை யாற்கோதப் படுமேலிவை யெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து" — எனவும்,

"மாணாப் பகைவரை மாறேற்றுக் கல்லாதார்
பேணா துரைக்கு முரைகேட் டுவந்ததுபோல்
ஊணார்ந் துதவுவதொன் றில்லெனினும் கள்ளினைக்
காணக் களிக்குங் களி" — என,

கள்ளைப் பொருளென்று உண்டு வருவோர் எத்தகைய பெருவாழ்க்கைய ராயினும், அவர்களுக்குப் பகைவர்

அஞ்சார், அவர்கள் தம் புகழை இழப்பர். அறிவுடை யான் கள்ளை யுண்ணுதொழிக, உண்ண விரும்பின் அவன் நல்லோரால் மனிதனுகவைத்து எண்ணப்படான். கள்ளுண்பவனைப் பெற்றதாய் காணினும் வெறுப்பாள் எனின், மற்றவர் வெறுக்கக் கேட்கவும் வேண்டுமோ? கள்ளை யுண்பவனுக்கு நாணம் முதலிய நற்குணங்கள் நீங்கும். இக் கள்ளுண்போர் தம் கையிலுள்ள பொருள் களை வலிமையாகத் தாமே சென்று விற்பவர்கையிற் கொடுத்துக் கள்வாங்கி யுண்ணுதல், தாம் செய்வதின்ன தெனத் தேராச் செயலல்லவோ? கள்ளைப் பலகாலும் உண்போர் விஷமுண்டு மரணத்தை விளைவித்துக் கொண் டவர்களை யொப்பரன்றியவர்களை யாருக்கு ஒட்பிட்டுக் கூறலாம். எக்காலத்தும் கள்ளை மறைந்துண்டு வாழ் பவரைக் கண்டார் நகைத்துப் பரிகசித்து அவமதிப்பர். அறிவுடையார் கள்ளுண்பவனைக் கண்டால் அவனை யணுகி வார்த்தை யாடலும் மாபாதகமென்று அஞ்சி நீங்குவர். கள்ளுண்பான் ஒருவன் தான் கள்ளினை யுண்டு களித்திராத காலத்துத் தன்னைப்போல் கள் ளுண்டு களித்துப் பல்லாரால் பழிக்கப்பட்டு அறி வழிந்து, உடை யவிழ்ந்து, கால் கைகள் தள்ளாடி, ஓடிப் பாடி வருபவன் ஒருவனைக் கண்டால் நாம் கள்ளுண்டு களித்து வருகையிலும், இவ்வாறே பலராலும் பழிக்கப் படுவோ மல்லவா வென்று நினையானோ?

முன்னம் யாதவர்கள் பிண்டாரக க்ஷேத்ரத்துத் தவம் பூண்டிருந்த முனிவர்களைப் பரிகசிக்க வேண்டிச் சாம்பனைக் கருப்பிணிபோல் பெண் வேடங் கொள்ளச் செய்து அவனை இருடிகளின் முன்பு அழைத்துச் சென்று இவள் வயிற்றிருப்பது ஆணோ? பெண்ணோ?

வென வினவினர். முனிவர்கள் இவள் வயிற்றிருப்பது ஆணுமன்று, பெண்ணுமன்று, அலியுமன்று உங்கள் குலத்தைக் கருவறுப்பதாகிய ஓர் இருப்பு உலக்கை என்றனர். அவ்வாறு சாபம் பெற்று மீண்டபின் சாம்பன் வயிறு வாய்த்து ஓர் இருப்புலக்கை பெற்றான். இச் செய்தி கண்ணனறிந்து இருப்புலக்கையை யராவிக் கடலினிடுக வென்றனன். அவ்வாறிடப்பட்ட அரப் பொடிகளிலிருந்து சம்பங் கோரைகள் முளைத்தன. அரா வுதலுக் ககப்படாமல் ஒரு இருப்புத் துணிக்கை இருந் தது. அதனைக் கடலில் எறிந்தனர்; அத் துணிக் கையை ஒரு மீன் விழுங்கிற்று; விழுங்கிய மீன் வேடன் வலைப்பட்டது; வேடன், அதைச் சேதிக்க வயிற்றில் இருப்புத் துணிக்கை யிருக்கக் கண்டு அதைத் தன் அம்பின் நுனியில் இட்டனன்.

இது நிற்க; முன்னர் கண்ணன் சொற்படி இருப் புலக்கையை யராவிவிட்டோம். இனியொன்றும் இடையூ றின்று, எனக் களித்திருந்த யாதவர்கள், ஒரு முறை விளையாட்டாகக் கடற்கரைக்குச் சென்று கள்ளுண்டு களித்திருக்கையில், ஏதோ காரணமாக ஒருவர்க்கொரு வர் பகைகொண்டு, தம்மிற்றாமே போர் விளைத்து ஆயுதங்கொண்டு செல்லாமையால் ஆண்டு முளைத்திருந்த கோரைகளைப் பிடுங்கி ஒருவரை யொருவர் தாக்கி மடிந்தனர்.

பின் யாதவர் அழியக் கண்ணன் ஓர் மரத்தடியில் நித்திரை செய்யக்கண்ட இரும்புத்துணிக்கை கொண்ட வேடன், கண்ணன் திருவடியை ஓர் புறவென வெண்ணி, அம்பெய்தனன். அது கண்ணனைப் பரமபத மேறச் செய்தது. இவ்வகை செய்தது கள் அல்லவா?

"புலைமயக்கம் வேண்டிற் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கங் கள்ளுண்டு வாழ்தல் — சொலைமுனிந்து
பொய்ம் மயக்கஞ் சூதின்கட்டங்க விம்மூன்றும்
நன்மை யிலாளர் தொழில்" — எனவும்,

"கள்ளி னிடும்பை களியறியும்" — எனவும்,

"பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியா ரினஞ்சேரான் — வையான்
கயலியலுண் கண்ணாய் கருதுங்கா லென்றும்
அயல வயலவா நூல்" — எனவும்,

"போகம் பொருட்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள்
சோகம் படுஞ்சூதே சொல்வன்மை — சோகக்
கடுங்கதத்துத் தண்ட மடங்காமை காப்பின்
அடுங்கதமி லேனை யரசு" — எனவும்,

"களியான் கள்ளுண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான் — எளியாரை
எள்ளானீத் துண்பா னேதமின் மண்ணாடு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து" — எனவும்,

பெரியோர் கூறி யிருக்கின்றனர். இதுவன்றியும், முன்னம் இராமனுக்குக் கார்காலம் சென்றவுடன், படைத் துணைவருவேன் என்று கூறிய சுக்ரீவன் இராஜ்ய சுகம் பெற்றவுடன் கள்ளுண்டு களித்து, சொல்தவறி இலக்குமணனிடஞ் செல்ல அஞ்சி,

"உறவுண்ட சிந்தை யானு
முரைசெய்வான் ஒருவர்க் கின்னம்
பெறலுண்டே யவரா லீண்டியான்
பெற்றபே ருதவி யுற்ற

திறலுண்டோ வென்னிற் றீர்வா
னிருந்தபே ரிடரை யெல்லாம்
நறவுண்டு மறந்தேன் காண
நாணுவ னம்ப வென்றான்" — எனவும்,

"ஏயின விதுவலால் மற்
றேழைமைப் பால தென்னோ
தாயிவண் மனைவி யென்னுந்
தெளிவன் றேற்றரும மென்னும்
தீவினை யைந்தி னொன்றா
மன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்றா மயக்கின்மேன்
மயக்கும் வைத்தாம்" — எனவும்,

"தெளிந்து தீவினையைத் தீர்ந்தோர்
பிறவியைத் தீர்வ ரென்று
விளிந்திலா வுணர்வி னோரும்
வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நீக்கி
நறவுண்டு நிறைகின் றேனல்
அளிந்தகத் தெரியுந் தீயை
நெய்யினா ளெதுக் கின்றாமால்" — எனவும்,

"தன்னைத் தானுணரத் தீருந்
தகையறு பிறவி யென்ப
தென்னைத் தான்மறையு மற்றைத்
துறைகளு மிசைத்த தெல்லாம்
முன்னைத் தான் றன்னையோரா
முழுப்பிணி யழுக்கின் மேலே
பின்னைத் தான்பெறுவ தம்மா
நறவுண்டு திகைக்கும் பித்தோ" — எனவும்,

"வஞ்சமும் களவும் பொய்யு
மயக்கமு மரபில் கொட்பும்
தஞ்ச மென்றுரை நீக்குந்
தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்ச மெல்லணங்குந் தீருங்
கள்ளி னுலருந் திறைை
நஞ்சமுங் கொல்வ தல்லா
னரகினை நல்கா தன்றே"

"ஐயநா னஞ்சினே னிந்நறவினி னரியகேடு
கையினு லன்றியேயுங் கருதுதல்கரும மன்றுல் [வீரன்
வெய்யதா மதுவையின்னும் விரும்பினே னென்னின்
செய்யதா மரைகளன்ன சேவடிசிதைக்க வென்றுன்"

என்றுங் கூறிப் புலம்பினன்.

ஆதலாலிக்கள், இவ்வகை நம்மைச் செய்வித்தது என்று துக்கித்து ஒருவாறு தேறி, வயிற்றிலிருந்த கசனை நோக்கிக் கச நான் உனக்கு மிருத்தியுஞ்சய மந்திரத்தை யுபதேசிக்கிறேன். அவ்வாறு உபதேசித்த உடனே உயிர்பெற்று என் வயிற்றைப் பிளந்துகொண்டு வெளி வருவாய்; அதனுல் எனக்கு மரணம் உண்டாம். அம் மரணத்தை நான் உனக்கு உபதேசிக்கும் மந்திரத்தால் போக்குவையாயின் அதை உபதேசிக்கிறேன் என்று கூறினன். கசனும்,

"எந்நன்றி கொன்றுர்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு — எனவும்,

"காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது" — எனவும்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" — எனவும்,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்" — எனவும்,

நீதிகளைக் கூறி உடன்பட்டனன்.

கசன் கூறிய உறுதி மொழிகளைக்கேட்ட என் தந்தை களிப்புற்றுக் கசனுக்கு மந்திரோபதேசஞ் செய்தனர். கசன் வெளிவந்து மீண்டும் இறந்த என் தந்தையை மந்திரத்தால் எழுப்பினன். மந்திர உபதேசம் பெற்ற கசன், இனி யீண்டிருத்தல் தகாதென வெண்ணித் தன்னகம் செல்லவெழுந்து என் தந்தையிடம் விடை கொண்டனன். பின்னர் நான் சென்று நீர் போவதென்? நீரோ பிரமசாரி நானோ கன்னிகை நாம் இருவரும் மணஞ்செய்து சுகித்து வாழலாம் எனக் கூறக் கேட்ட கசன், என்னை நோக்கி, ஏ தங்காய்!

"அன்னசொன் மைந்தன் கேட்டே
யறனலா நெறிமேற் கொண்டு
சொன்னசொன் மேம்பா டாமோ
தூயமந் திர மெனக்குப்
பன்னினோன் றந்தை யன்னோன்
பயந்தநன் மகணீ நாயேற்
குன்னருந் தங்கையின் றுரைக்கொணு
வுரை சொற்ருயே"

எனக் கூறினன். அதனுல் நான் வெகுண்டு உனக்கு அம்மந்திரம் பலியாதிருக்கவெனச் சபித்தனன். அவன் அது எனக்குப் பலியாதிருப்பினும் என்பால் பெற்றவரிடம் பலிக்கவென்று சொல்லி என்னை நோக்கி, உன்னை யந்தணர் மணக்கா திருக்கவென்று சபித்தனன். நான் இலவுகாத்த கிள்ளைபோ லாயினேன். ஆதலால், நீ என்னை மணத்தல் தகுதியென்று கூறி முடித்தனள்.

தேவயானியும், தந்தையின் கட்டளையால் யயாதியை மணந்து தனக்கு அடிமையாகிய சன்மிஷ்டையுடன் அரசன் மாளிகை சென்று இன்புற்றிருக்கையில் யயாதி சன்மிஷ்டையிடம் பிரியமுற்றவனு யிருந்தான். சன்மிஷ்டையும், தேவயானி யறியாமல் அரசனுடன் கூடித் துற்கிரன், அநு, பூரு என்போர் மூவரைப் பெற்றனள். தேவயானியும் எது, துர்வசு, என்னும் இருவர் குமரரைப் பெற்றனள். சன்மிஷ்டையிடம் அரசன் ஆசை கொண்டிருப்பதை யறிந்த தேவயானி தந்தையிடஞ் சென்று அரசனது தீயொழுக்கத்தைக் கூறச் சுக்ரன் கோபங்கொண்டு நீ பெண்மயலைப் போக்கும் மூப்படைக வெனச் சாபமிட்டனன். சாபமேற்ற யயாதி, இருவரிடம் பிறந்த மக்களை நோக்கி நான் பல போகங்களை அனுபவிக்கும் பருவத்தை இழந்து சாபத்தால் மூப்பைப் பெற்றேன், உங்களில் எவரேனும் எனது மூப்பை யேற்றுக்கொண்டு உங்கள் இளமையைத் தருவீரேல் எனதுலக வின்பத்தை முடித்து விரைவில் என் மூப்பை யேற்றுக் கொள்ளுகின்றேன் என்றனன்.

தந்தையின் சொற்கேட்ட ஐவரில் சன்மிஷ்டையின் குமாரனுகிய பூருவொழிந்தவர்கள் மறுத்தனர். அதனுல் யயாதி அந்நால்வர்களையும் வேடர்களாகச் சபித்தனன். பூரு மாத்திரம் அரசனது ஆவலைத் தீர்க்க எண்ணங்கொண்டு தந்தையின் மூப்பைத்தான் பெற்றுத் தனதிளமையைத் தந்தைக்குக் கொடுத்தனன். யயாதி சில காலம் இளமையால் அடைய வேண்டிய இன்பங்களை அநுபவித்துக் குமரனின் இளமையை மீண்டும் அவனுக்குத் தந்து இராஜ்யத்தைப் பூருவிற்கே கொடுத்துத் தான் தவமேற் கொண்டனன். இது

வரையில் பிரிய விரதனது முதன் மனைவியின் வம்சத்தைக் கூறினேன்.

இனி பிரியவிரதனுக்கு மற்றொரு மனைவியிடம், உத்தமன், தாமசன், ரைவதன், என்னும் மூன்று குமாரர்கள் பிறந்தனர். இவர்கள் மநுக்கள் ஆயினர். இவர்களது சரிதையை அம் மநுக்களின் சரிதை வருமிடத்துக் கூறுவோம். இனி சுவாயம்புமநுவின் மூன்றாவது குமாரனாகிய உத்தானபாதனது சரிதையைக் கூறுவோம்.

## நான்காம் அத்யாயம்

உத்தானபாதன் என்பான், சுவாயம்பு மநு வம்சத்து இரண்டாவது புத்திரன். இவன், முடிமன்னர் வந்து வணங்க ஆயிரம் பணு முடிகளையுடைய ஆதிசேடனுல் தாங்கப்பெற்ற பெரும்பூமியைத் தன்னிருதோள்களில் தாங்கிவரு நாட்களில் புதிய மலர்சூடி யகிற்கூட்டு அளாவப்பெற்றுக் கடனீரைக் குடிக்கும் மேகம் போன்ற கூந்தலையும் பசும்பொன்னுலாகிய தொடிகளையும் பூண்ட சுநீதி என்பவளையும், அழகிய காதணிகளை யடர்க்கும் வேல்போலும் கண்களையுடைய சுருதி என்பவளையும் மணந்தான். வரையிலுள்ள மயிலை ஒத்த சாயலையுடைய சுநீதி என்பாள் கருவுற்று, துருவன் எனும் அருங்குழவி பெற்ருள். சுருதியோ தானும் அவ்வாறு வயாவும் வருத்தமுமீன்றக் காணுவுந்தாங்கிப் பத்துத் திங்கள் சென்றபின் பண்புடையவனுகிய உத்தமன் எனும் ஒரு மகவை யீன்ருள். இவ்விரு மக்களும் தாய் தந்தையருக்குக் களிப்பினை வருவித்து விளையாடி வந்தனர்.

இவ்வாறு ஒரு நாள் மதங்கொண்ட யானைச் சேனைகளையுடைய உத்தானபாதன், மலர்மாலை யணிந்த கரிய பெரிய காரிகையார் கவரிவீசத் தித்தியா நின்ற தெள்ளிய அமிர்தத்தினை யொத்த தீஞ்சொற்களைப் பேசும் சுருதியீன்ற உத்தமனை மடியில் வைத்துச் சிங்காதனத்

தில் வீற்றிருந்தனன். இவ்வாறு, அரசனரங்கில் வீற்றிருப்பக் குறங்கின்மேல் உத்தமன் இருத்தலைக் கண்ட துருவன், தானும் அவ்வாறு அரசன் மடிமீதேறி விளையாட வெண்ணி, அரசனை யணுகி மடிமீது ஏறச் செல்லுகையில்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்பதை ஆய்ந்தறியாதாளாகிய சுருதி, பொறாமை என்னும் பேய் கழுத்தைப் பிடித்துந்த, ஏ துருவா! "குப்பையிற் கீரை முளைத்தால் கப்பலுக்குக் காலாமா?" நன் மரபில் தோன்றி நரபதியின் மணிமுடிக்குரிய நங்கையாகிய என் வயிற்றிற் பிறவாமல் எனது மாற்றாள் வயிற்றில் பிறந்த நீ, மன்னனது மடிமீது ஏறல் தகாதென மறித்துக் கூறி நீ காடுசென்று பிரமனை யெண்ணித் தவம்புரிந்து என் வயிற்றிலுதிக்கும் பாக்கியம் பெற்று வருகவெனக் கூறினள்.

இச் சொல் துருவன் செவியில் நாராசம்போல் புகலும் துருவன் அஞ்சி, முகம்வாடி யிருந்தனன். இஃதறிந்த தந்தை, சுருதியிடம் வைத்த அன்பினால் அவள் மனம் புண்படும் என வெண்ணி, வாளா விருந்தனன்.

"இல்லாள்கட் டாழ்ந்த இயல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்" — எனவும்,

"மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று" — எனவும்,

"இமையாரின் வாழினும் பீடிலரே யில்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர்" — எனவும்,

"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையினுணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து"

என்பதற்கு இலக்கியமாய் அரசன் ஒழுகினன். ஐயோ பாவம்; துருவன் மனங்குன்றி இளையோனாயினும்,

"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற் றேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்" — எனவும்,

"இளையா னடக்க மடக்கம் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பயன் — எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை" — எனவும்,

"ஆர்த்த வறிவின ராண்டிளைஞ ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப மூத்தோ றூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்" — என,

பொறுத்திருந்து அவ்வாறு கூறிய சிற்றன்னையாகிய சுருதியைச் சிரம் மண்ணிற் பொருந்த சாஷ்டாங்க தண்டனிட்டு வாயைக் கையாற் பொத்தி அந்திக் காலத்து வந்த ஆவைக்கண்ட அருங் கன்றுபோல் தாளுந் தடக்கையுங் கூப்பி நின்றனன். நின்ற மைந்தனை இரும்பினாலமைந்த நெஞ்சினையும், கொன்றுழல் கூற்றத்தை ஒத்த கொடுமை யுடையவளுமாகிய சிற்றன்னை என்ன தாமதம் விட்டகல்க என்றனள். அப்பொழுது துருவனது முகம், முன்னர் சற்று வெப்பமாயினது எனினும் அவன், அவளுஞ் சிற்றன்னை தானே தாயினும் வேறல்லளாதலால் அவளுரையும் தாயுரை போன்றதே யென்று அலர்ந்த அரவிந்த மலரை ஒத்த முகமுடையனாய் அவளடியிணை

யிறைஞ்சி மீட்டும் தன்னைப் பெற்ற தந்தையை மனதில் நினைத்துத் திசை நோக்கி வணங்கிப் பூதேவியும் சிதேவியும் அந்தோ இளஞ் சிறுமகனுக்கு இத்தகைய ஆபத்து வரலாமோவென்று மனமிரங்கத் தன் தாயிருந்த அரண்மனையை யடைந்தான். இவ்வாறு வொரு பொழுதும் வராத மகன் முகத்தை நோக்கிய தாய், எதிர்கொண்டு சென்று வாரி யெடுத்து உச்சிமோந்து மார்புடனணைத்து என்னருமை மணியே! யன்பே! ரசமே! பெருமை குலைந்து பேதுரக் காரணம் என்னவென்று வினவினள்.

மகன் நடந்த செய்திகள் முற்றும் தாய்க்குக் கூறினன். அவ்விடத்து அந்தவாசகமென்னும் அனல், அழகிய குழையணிந்த அருஞ்செவியில் நுழைதலும் அழுதாள், ஏங்கினள், இளைத்தாள், வீங்கினள், விழுந்தாள், எழுந்து மகனே நான் அவளுடைப் புத்திரனை யுன்னின் வேருக எண்ணவில்லை இவ்வாறு வஞ்சகமாக எண்ணி, உன்னைத் தவமியற்ற வேவினது கொடுமையோ? இவ்வகை இவன் காடு செல்லின், அவ்விடமுள்ள விலங்கு பேய் முதலியவைகள் கொன்று தின்ன இரையாயின்; நம் மகன் புவி முழுதும் ஒரு குடைக்கீழ் ஆள்வான் என்ற எண்ணமோ? என்று கையைக் கையுடன் நெரிப்பாள், ஆலிலைபோ லழகுள்ள வயிற்றை யிப்பாழ் வயிறல்லவோ உன்னைப் பெற்றது என்று தன் வளைபுனைந்த கரங்களால் பிசைவாள், பெருமூச்சுவிட்டுப் புழுங்கி என் நாயகன் கருணை மிகநன்று, மிகநன்று என்று சிரிப்பாள், எதிரில் நின்ற தன்னிளங் குமரனை நோக்கி யழுவாள்.

இவ்வாறு துயருறுந் தாயைத் துருவன் நோக்கி யம்மே! நீர் இவ்வாறு துயாமுறல் ஆகுமோ? பெரிய

சக்ரவர்த்தி அரசாளுங் காலத்தில் சிற்றரசர்கள் அவனை என்செய்ய மாட்டுவர்; தீவினை மேலெழுந்து தன் காரியங்களைச் செய்கிற காலத்து ஒருவன் தன் முயற்சியால் செய்யலாவது ஒன்றுமில்லை என்பதை,

"எவ்வந் துணையாப் பொருண்முடிக்குந் தாளாண்மை
தெய்வ முடிப்புழி யென்செய்யும் — மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கும்ஊர குறும் பியங்கும்
கோப்புக் குழிச்செய்வ தில்" — எனவும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

அம்மா, வரும் விதி வழியில் நிற்காது, சந்திரனும் ராகுவால் துன்பமுறுகின்றான். அவ்வாறே, வருவது தானே வரும்;

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமால் — பொங்கி
அறைப்பா யருவி யணிமலை நாட
உறற்பால யார்க்கு முறும்" — எனவும்,

"கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால் — விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது" — எனவும்,

"ஈண்டுநீர் வையத்துள் எல்லாரு மெத்துணையும்
வேண்டார்மன் தீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது"

ஆதலால், நீர் விசன முறவேண்டாவென்று தேற்றத் தாய், மகனை நோக்கி, என் கண்ணின் மணியே பாவியேன் பாழ்வயிற் றுதித்தனை யாயினும், என் மாற்றவள்

"சிட்டுக் குருவிமேல் பிரம்மாஸ்திரம் பிரயோகஞ் செய்வது போல்" இளங்குழவி என்றெண்ணாது தவம்புகச் சொன்னாள் என்னும் சொல், என் மனத்தை வருத்துகிறது. பின்னும் அவ்வாறு அவள்தான் "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்பதை நோக்கிச் செய்தாளேனும், இவற்றை நோக்கி உடன்பட்ட சேங்கோலனும் அவ்வாறு கூறினனன்றோ ? அரசனாவான் பலர் பல படக் கூறினும் தான் சொல்வதை ஆய்ந்துணர்ந்து கூறுதலன்றோ முறை,

"எதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு — நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு" எனவும்,

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு" — எனவும்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" — எனவும்,

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்" — எனவும்,

கூறி யிருக்கின்றனர். ஆதலின், மநு வம்சோற்பவனாகிய இவன் குமரர் இருவரில் ஒருவனைப் பெருமைப்படவும் மற்றவன் சிறுமை யுறவும் செய்தல் அரச நீதியாமா ? அரசன் முறைசெய்யுங் காலத்து இவர் செல்வர் இவர்களது பிழையை மன்னித்தல் தகுதி, இவர்கள் வறியர் இவர்களைத் தண்டிக்கலாம் என்று வழுவி நடத்தலாமா ? அவ்வாறு முறை வழுவி நடுவாகச் செய்யா தொழியின் அது ஒரு பிள்ளைக்குத் தாய் ஒரு புறத்து முலைப்பாலை நீராக வொழுக்கி மற்றொரு

பிள்ளைக்கு மற்றொரு முலைப்பாலைப் பாலாக ஒழுக்கிய முறையை யொக்கும்,

> "முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந்த வர்க்கு
> மிறைதிரியா நேரொக்கல் வேண்டும் — முறைதிரிந்து
> நேரொழுகா னாயி னதுவா மொருபக்கம்
> நீரொழுகிப் பாலொழுகு மாறு"

அன்றியும், அரசன் தாக்ஷண்யமுள்ளானா யிருத்தல் வேண்டும் ;

> "கண்ணுக் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேல்
> புண்ணென் றுணரப் படும்"

> "மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
> டியைந்துகண் ணோடாதவர்" — என்ப

ஆதலால், நீ யீண்டிருத்தல் தக்கதன்று. "கொடுமையுள்ள யரசனுட்டிருப்பதினும் கடும்புலிவாழுங் காடுநலமுடைத்து"

> "கொடுங்கோன் மன்னன் வாழு நாட்டின்
> கடும்புலி வாழுங் காடுநன்றே" — எனவும்,

> "மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
> மன்னுவா மன்னர்க் கொளி" — எனவும்,

> "முறை கோடி மன்னவன் செய்யி னுறைகோடி
> யொல்லாது வானம் பெயல்" — என்ப

ஆதலால், மதலாய் ! அருந் தவஞ்செய்து பெறுதற்கரிய அரசுரிமையை அவள் பெற்றாள் என்றால், நீயும் பெருந் தவமாற்றி வானவர்க்கும் பெறுதற்கரிய திருந்திய சோதிமயமுள்ள உயர்ந்த பதவியைப் பெறும்பொருட்டு, குற்றமற்ற மனத்தில் நெய்தவழ் நேமியானாகிய கமலக் கண்ணனை நினைத்துத் தவம் இயற்றிப் பெறுதற்கரிய பேறடைக.

முன்ன மிவ்வாறே உன் முன்னோராகிய மநுக்களும், யமுனையிற் பூத்த தாமரைபோலுங் கண்களை யுடைய பதுமநாபனை எண்ணித் தவங்கிடந்து எய்து தற்கரிய பதங்களை யடைந்தனர். ஆதலின், நீ கலங்கல்! மன உறுதிகொண்டு மலர்மகள் கேள்வனைத் துதி. முன்ன மிவ்வாறே உன்னையொத்த சிறுவன் ஒருவன் தன் வாணாளின் பதினாறு முடிவது கேட்டுக் காலங்கடந்த காலகாலனை யெண்ணிப் பூசை புரிந்து ஆயுள் நெடிது நீடிக்க வாழ்ந்திருந்தான்.

“உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்து வன்மையு முண்டே — யுலகறிய
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி”

“மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளா டாமரையி னாள்” — என்ப,

ஆதலால் நீ சென்று தவம் பூண்டு உன்னெண்ணத்தை நிறைவேற்றுக! என்று விடை கொடுத்தனள். இவ்வாறு, விடை கொண்ட இளஞ்சேய் நீங்குவது கண்ட நகர மாக்களும், அந்தணர்களும், அருந்தவரும், வேற்றர சர்களும், அந் நாட்டிலுள்ளார்களும், இச் செய்திகளை யாகாய வெளியிலிருந்து காணும் தேவர்களும் மனம் புழுங்கிச் சிலர் விழுந்தனர். சிலர் விம்மி விம்மி மேல் எழுந்தனர். சிலர் முகத்தினின் றிழிகின்ற கண்ணீரிடை யழுந்தினர். சிலர் தங்கள் கூந்தல்களில் நெருப்புப் பற்றியதுபோலத் துயர மடைந்தனர். இவ்வாறு இளங் குரிசில் தன்னகர நீங்கிச் சென்று நாட்டை யடைந்து தான் எப்பொழுதும் பாராத முல்லை நிலத்தை யடைந்து ஆண்டு கோவலர் குரவை யாடுதலையும், குழ லூது

வதையும், அவைகளைக் கண்டு, ஆக்களும் ஆடுகளும் தம்மை யறியாது மயங்கி நிற்பதையும், காட்டுக்கோழி முதலிய புட்கள் கூதலையும், மான், முயல் முதலிய துள்ளிப் பாய்தலையும், மலையினின்று கான் யாறுகள் ஓடிப் பெருகுதலையும், ஒரு புறத்தில் குல்லை, முல்லை, தோன்றி, பிடவம், கொன்றை, காயா முதலிய மலர்ந்து நிற்பதையும், மற்றோரிடத்தில் இடைச்சியர் வரகு, சாமை, முதிரை முதலியவற்றைக் காத்தற்பொருட்டு, பறை, முல்லையாழ் முதலிய கொட்டிக்கொண்டும் சாதாரிப் பண்ணிசைத்துக் கொண்டு நிற்பதையும், வேறோரிடத்தில் சாமை, வரகு முதலிய விதைத்துக் கொண்டும், அவை முதிர்ந்தகாலத்து அரிந்துகொண்டும், குரவைக் கூத்தாடிக்கொண்டும், கடாவிட்டுக்கொண்டும், விடை தழுவிக்கொண்டும் இருப்பதை யிறும்பூதுடன் பார்த்துக்கொண்டு நீங்கினான்.

இங்ஙனம் நீங்கித் தவமியற்றச் செல்லும் இளங் கோவை யறுதொழிலாளராகிய சப்தருஷிகள் கண்டு, இவ்வரிய கானத்தில் தவம்புரிய வந்த நீ யார்? உன்னைக் காணின் தவமியற்றும் பருவம் அடையாதான் போலத் தோன்றுகின்றது. இவ்வனம் பேய் பூதம் விலங்கு முதலியவைகளால் நிறைந்தது. உன்னை ஏதேனுந் தனக்கு இரையாகக் கொண்டுவிட்டால் எல்லாப் பிறப்பினும் அருமையாகக் கொள்ளத்தக்க இம் மாநுஷப் பிறவி வாய்ப்பது அருமையாயிற்றே என்று கூறி, நீ தவமியற்றல் தகாது, உன் இருக்கைக்கேகுக! என்றனர். கேட்ட இளஞ்சேய், ஐய! நான் என் தந்தை யடலரியாசனத்திருக்கை மறுத்தனனதனால் அப்பதம் வேண்டாது அமரர் முதலியோர்க்கும் மேம்பட்ட பதம் விரும்பி நோற்க வந்தனன், என்றான்.

ஆவணக்காப்பக

முனிச் சிரேட்டர்கள் இரக்கமுற்று இளமையாகிய துளவத்தாம மணிந்த தோள்களை யுடைய காயாம்பூப் போலும் திருமேனிபெற்ற முதல்வனது பொன்னடிக ளைப் போற்றின் முடியாத பொருள் உண்டோ? முன்னர் மலரவனும் மற்றத் தேவர்களும், அன்னவனுருவமாகிய மந்திரத்தை யெண்ணிச் செபித்து உயர் பதங்களைப் பெற்றனராதலின் நீயும் அவ்வகை செய்க வென்று கூறி நீங்கினர். பிறகு துருவன், தவஞ்செய்யத் தொடங்கு கையில் தாழ்ந்த சடையும் தண்டுகமண்டலமுந் தாங்கிய நாரதமுனிவன் தோன்றி, தனது கரத்தை யவன் உச்சியில் வைத்து, சிறுவ! உனக்கோ பருவம் ஐந்து நிறம்பிற்றில்லைபோல் காண்கின்றது; நீயோ பாலருந்தும் பிள்ளை; யுன்னை, உன் பெற்ஞேர் எவ்வாறு நீங்கினர்? பெரிய அரிய மாதவத்தவரும் இன்றும் காணவரியவவ் வரியைக் காணுதல் உன்னுலெவ்வாறு முடியும்? ஆதலால், நீ தவமாற்ற வல்லவன் அல்லன். உன் இல்லம் ஏகுக என்றனன். இதைக்கேட்ட அரசிளங்குமரன் ஐங்குறும் பெறிந்த அருமறை முநிவ! தேவரீர் கூறிய துண்மையாயி னும் இன்று அது என் மனத்திற்குப் பொருந்தவில்லை; நான் உயர் பதம் விரும்புகின்றேன்; அதற்கு வேண்டி யதை யருளிச் செய்யவேண்டுமென வணங்கி நின்றனன்.

நாரதமுனிவன் அவ்வாறு வணங்கிய பச்சிளங் குழவியை வாரியெடுத்துத் தழுவி உச்சிமோந்து, அண் ணலே! இந்த மதுரைக்குச் சிறிது தூரத்தில் மதுவனம் என்று ஒன்றுண்டு. அந்தப் பூங்காவின் ஒருசார் யமுனை வெள்ளம் பொங்கித் ததும்பி யோடா நிற்கிறது. அதில் நாடோறும் மூழ்கி, நியமப்படி நித்திய கருமம் முடித்து, உலகமெல்லாம் ஓரடியால் அளந்த வுத்தமனை மனதி

னெண்ணித் தவஞ்செய்யக் கடவாய்! என்று அத்திருமாலின் அஷ்டாக்ஷரத் திருமந்திரத்தை யவன தருஞ்செவியில் உபதேசித்து மறைந்தனன். இவ்வாறு மந்திரோபதேசம் பெற்ற துருவன், குதூகலம் அடைந்து, வைங்கானகம் கடந்து மதுவனஞ் சென்று யமுனையாடி, நித்திய கருமமுடித்து, உலகம் யாவையுந் தாமுளவாக்கலும் காத்தலும் நீக்கலுமாகிய அலகிலா விளையாட்டுடைய ஆதிகேசவனை மனத்திடைப்பதித்து, சில நாள் பழங்களைப் புசித்தும், சில காலம் சருகு முதலியவைகளைப் பசிக்கடைத்தும், சிலவேல்லை நீரையே பானஞ் செய்தும், சில பொழுது காற்றையே பக்ஷணமாகக்கொண்டும், சில திங்கள் ஒன்று மருந்தாமலுந் தவஞ்செய்யத் தொடங்கினன்.

இவ்வாறு சில நாட்கள் செல்ல, இளையான் பூரிக்கின்ற பிராண வாயுவினை வெளியிற் செல்ல வொட்டாது இடைகலை பிங்கலை ஆகிய இரண்டினையும் சுழுப்திபிடத்துத் தரிக்கச் செய்து, அதனை ஆஞ்ஞாத்தானத்து நிறுத்தித் தனது பூப்போன்ற தாள்களி லொன்றை யூன்றிக் கொண்டு, மற்றைய தொன்றைத் தொடையிற் சேர்த்தி "உயிராவணமிருந்து வுற்று நோக்கி யுள்ளக் கிழியினுருவெழுதி யுயிராவண மிட்டுத்தன்னை யவனுக் கடிமையாக்கித் ததேக த்யானமாய்த் தவஞ்செய்யத் தொடங்கினன். இவ்வகை யிவனது தபோ நிலையால், கடலால் சூழப்பட்ட வுலகங்களெல்லாம் தன் வயிற்றடக்கிய திருமகள் கொழுநன் இவனுட் பட்டமையால், இவன் ஒருவிர லூன்றி நின்றனனுயினும் உலகங்களெல்லாம் இவனது தபோஜ்வாலையைப் பொறுக்கலாற்றாது கடனீர்ப் பெருக்கத்துப்பட்ட புணைபோ லாயின.

இவனது தபோ நிலைகண்ட ஐராணி கேள்வன், இவன் வயதிலோ பேரிளையனாய் இருக்கிறான். இவன் செய்த தவத்தோற்றமோ வுலகத்தை யெல்லாம் பாழ் படுத்துவதுபோலக் காண்கிறது, என் செய்வதெனச் சற்று ஆலோசித்து, இவன் யார் பதம் பெறவெண்ணி யித்தவம் புரிகின்றான், நான் இதற்குக் கேடு விளைவிக் கின்றேன் எனத் தீர்மானித்து,

"தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்"

முன்புதான் சில தவத்தவரால் அவமதிப்படைந்த மையும் எண்ணாது,

"பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம்பக்க மிருந்தைக் கிருந்தன்று" — என,

சற்றும் யோசியாது,

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு" — என்பதையும்,

ஆராயாது, இவனைக் காமனை யேவிப்பெண்களால் வசப் படுத்தித் தவநிலை கெடுப்போமெனின் இவன் அப்பருவந் தலைகாணாப் பாலனாயிருக்கிறான்; ஆதலால் இவனுக்கு அரம்பையரால் துன்பம் நேராது; இவனிடம் பெருங் கண் பேழ்வாய்க் குறுநடைக் குழாமாகிய பேய்க் கணங்களை விடின், சற்று அஞ்சி அலமருவான் என்று எண்ணி, அலகைக் கூட்டங்களை யரும்பாலகன்மே லேவி னன். விடுத்த வெங்கனற்கண் வெய்யவாய் வேதாளங் கள், கறுத்துப் பயமுறுத்திக் குத்துவேம், விழுங்குவேம் என்று பல வுருக்கள்கொண்டு வெருட்டியும் அஞ்சா தது கண்டு, ஒரு பேய் இவனது தாய் உருத்தாங்கி ஆசை

யாலிவன் அருகிற்சென்று என்னருமைக் குழந்தாய் உன்னை நீங்கினதால் தரியேனுயிங்கு வந்தனன். உன்னை விட்டுயிர்வாழேன்;உன் தவநீங்கி இல்லம்வருகவெனவும், சலியாது வெருவாதவனுய்ச் சுடர்படைத் திகிரி, சங்கு தாங்கிய தனி முதல்வன் தாளிணையில் வைத்த மனம் துளங்காதவனு யிருந்தான். இவனைக்கண்ட பேய்கள், "அணைகடந்த வெள்ளத்தை யடைக்கப்போமா ?" நம்மால் இவனைக்கெடுக்க முடியாதென்று தேவநாதனிடங் கூறினர். கேட்ட இந்திரன், மழலையஞ் சிறுவன் மனஞ் சலித்தலின்றித் தவமியற்றும் மனவலிகண்டு உள நடுங்கித் தேவர் கூட்டத்தோடு பிரமனிடஞ்சென்று வணங்கி உலகெலாம் படைத்த ஒரு தனி முதலே உத்தான பாதனது ஒப்பறு புதல்வன் உயர்தவம் புரிதல் எப்பதம் பெற வென்று வினவினன்.

மலர் மகன், மகவானை நோக்கி அமரர் தலைவ! அவன் நும்பதம் விழைந்தவனல்லன். உங்கள் பதத்தினும் மேலாம பதம் பெறவெண்ணித் தவமிழைக்கின்றனன் எனக்கேட் டிந்திரன் தன் பதஞ்சென்றனன். பின்னிளைஞன், பிராண வாயுவை அடக்கிய வன்மையால் எத்தேவர்களும் உயிர்ப்புவிட வலியிலராய் மயங்கித் திருமகணுயகனை யணைந்து, யானைக்கு அபயந்தந்தன்று காத்த ஆதிமூலமே எங்களை அருட்கண்ணுற் கண்டளிக்கவேண்டுமெனப் பன்முறை துதிக்கக் கமலநாபன் துருவன் மூச்சைவிட்டிலன் ; ஆதலால், உங்களுக்கும் பிராணவாயு தடையுண்டது. உங்களைக் காக்கிறேன் என்று அபயந்தந்து வைநதேயன்மீது ஆரோகணித்துத் திக்கெட்டும் சோதிபிரகாசிக்க அருந்தவஞ் செய்யும் அருமதலை முன் தரிசனந் தந்தான். அவ்வகை தரிசனந்

தரவும், காணுதவனுய்த் தவமிழைக்குந் துருவனது சலியா நிலைகண்ட சாரங்கபாணி அவனுக்குள் விளங்கி நிற்குந் தன் சோதியுருவத்தை யொடுக்கி எதிர் நின்றனன். அச்சோதி உருமறைதலும் துருவன் திடுக்கெனக் கண் விழித்து எதிரில் பெருஞ்சோதி மயமாய்க் காணப்படும் நீலமணி வண்ணனைப் பூரணசந்திரன் போலத் திருமுகமண்டல முடையவனுகவும், கமலக் கண்ணும், இரண்டு சூரியர்க ளுதயமானதுபோல் சுடர் விட்டிலங்குகிற செவிகளும், சிறு நகையோடு கூடிய பவளம் போல் திருவாயும், தண்டுழாயலங்கல் மார்பும், தடக்கையோர் நான்கும் பெற்று இருத்தலைக்கண்டு, தன்னை யறியாத ஆனந்தக் கடலினமிழ்ந்தி ஆராப் பசி கொண்டான். அமிழ்துகண்டு உவப்பதுபோலத் தழுவுவான், தொழுவான், விழுவான், ஆனந்தக் கண்ணீர்விட்டு அழுவான் இவ்வாறு தன்னை யறியாது, பரமானந்த பரிதனுய்த் திருமகணுதனைத் துதிக்கத் தொடங்கினன்.

"குரைகழ லமரர் கணத்தி விந்திரனீ
கோட்களிற் பரிதிவா னவனீ
யுரைபெறு முலகி ஞன்முக னுறையு
முலகநீ யுடைதிரைக் கடலிற்
றிரைகொள்பாற் கடனீ கடவுண்மா நதியிற்
றீம்புனற் கங்கைநீ யுயர்ந்த
வரைகளி விமயப் பொருப்புநீ யானின்
வளமிகு சுரபிநீ யாமால்" — எனவும்,

"சோனையுங் காத்துநல் லானையுங்
காத்துத் துரோபதை தன்
றானையுங் காத்தடைந் தானையுங்
காத்துத் தடத்தகலி

மானையுங் காத்தனு மானையுங்
காத்து மடுவில் விழும்
ஆனையுங் காத்தவனே யெனைக்
காப்ப தரிதல்லவே" — என,

பலவும் பன்னித் துதித்து நின்றனன். துதியினால் களிப்புற்ற பரமபத நாதன், மழலைவாய்ச் சிறு மகவி னின் மொழிகேட்டுத் தனது திருக்கரத்திருந்த பாஞ்ச சன்னியத்தால் சிறுவனது கபோலத்திற் றடவச் சிறுவன் தவக்களை நீங்கி முகக்களைபெற்றுப் பலவாறு துதித்தனன்.

இப்படித் துதித்த சிறுவனை வாரி யணைத்து, உன தரிய தவத்திற் குளமகிழ்ந்தேன். நீ வேண்டுவதென் னென, நான் உயர்பதம் பெறுவான் ஆதரித்தனன் எனக் கேட்டு, அவ்வாறே ஆருக என்று, கேளாய்துருவனே! நான் உனக்கு தவத்தினுனுண் மகிழ்ந்தளிப்பதாகியபதம், இன்னும் தேவர்களும் மற்றவர்களும் பெறுதற் கேக்கற் றிருப்பது, உயர்ந்த மேருகிரியின் சிகரத்தில் விளங்கு வது, எல்லா உலகங்களுக்குமேலானது எக்காலத்தும் அழிவுருதது, சப்த ருஷிகளின் பதங்களுக்குமேல் பதின்மூன்று லக்ஷம் யோசனை தூரத்திருப்பது, இதனை உனக்குத் தந்தேன்; நீ உன்னூடு சென்று சத்துருக்க ளஞ்சும்படி இருபத்தாறுயிரம் வருஷங்களாண்டு பின்ன ரடைகவெனத் திருவுருக்கரந்தருளினர். சர்ப்பசயனன் மறைந்ததும் நான் என்னபுத்தி தடுமாறி யிவ் வகை வரங்கேட்டேன் எல்லாந்தரத்தக்கவன் எதிரில் தரிசனந் தந்தும் அழியா முத்திஇன்பம் வேண்டாமல் நிலையற்ற பதத்தை வேண்டினேன் எனத் தன்னுள் எண்ணி, வருந்திக் கொண்டு தன்னூடு செல்லத் தொடங்கினன்.

துருவனது வருகையை யொற்றரால் கேள்வி யுற்றவரசன், அடங்கா மகிழ்ச்சிகொண்டு வரவு கூறிய வேவுகாரர்களுக்கு மாந்தாகினி பொன்மலையில் தவழு மாறுபோலத் தானணிந்த பொன்னூர மாலைகளைக் கொடுத்து ஏவலரைப் பார்த்து நமது புதல்வன் திருமா மணி மார்பனருள்பெற்று நகரை நோக்கி வருகின் றான். ஆதலால் வீடுகளையும் தெருக்களையும் வாழை கமுகு தென்னை முதலிய சோலைகளால் நிரைத்து, முத்து மாலைகளால் அலங்கரித்து, கனகமணி தோரணங் கள் நாட்டி ஆகாயத்தை யளாவவுயர்ந்திருக்கும் மாடங் களைச் சாந்தாட்டி, வாசனை யோசனைவீசக் கற்பகப்பூமலர் களை நாற்றித் தெய்வலோகமே யீதென்று எண்ணும்படி யலங்கரிக்கப் 'பறையறையச் செய்யுங்கள் என்று, தான் அரசர் வணங்கும்படி முரசம் ஒலிப்பவும், வெள்ளிய சங்கோசை செய்யவும், சிவந்த தாமரை போலும் கால் களையுடைய தன் தேவிமார் சிவிகையிலேறிப் பின் றொடர்ந்து வரக் கொய்யுளையையுடைய குதிரைகள் பூட் டிய ரதத்தை விரைவாக நடத்திக்கொண்டு காலைப்பொழு தில் எழுகின்ற இளஞ்சூரியனைப் போன்று காந்தி தழைத்துவருகின்ற தனது காதற் புதல்வனை யெதிர் சென்று கண்டான்.

கண்ட அரசன், உள்ளத்தில் எழுந்த மட்டுப் படாத களிப்புப் பெருக்கடைந்து அலை வீச இரண்டு கைகளையுங் குவித்து அஞ்சலிசெய்து கொண்டுவரும் இளகிய சிறு பற்களையுடைய தன் காதலனைக் கண் ணால் விழுங்குபவனைப்போல் கேசாதிபாத மளவாகக் கண்டு ஒளிமிகுந்த பொற்றொடிகள் பிரகாசிக்குந் தன் னிரண்டு கரங்களால் தழுவி யணைத்து உச்சி மோந்து

இரண்டு கண்களில் ஒழுகிய கண்ணினீரால் பிள்ளையைக் கழுவினான். துருவன், இதற்குப் பிறகு சிவிகையை நெருங்கி, அதிலிருந்த கள்ளக் கருங்கண் சுருதியைச் செங்கையாலிறைஞ்சுதலும் அவளும் திருமால் அருள் பெற்றவர்களுக்கு எவரால் தீங்குண்டாகும் ஆதலால், பள்ளத்தில் ஓடிவரும் மலையருவிபோல் ஆசை மிகுந் தனள். அச்சிவிகை நீங்கித் தாயிருந்த இடஞ்சென்று வணங்கச் சுநீதியும், பிள்ளையை வாரியணைத்து உச்சி மோந்து தொடைமீ திருத்தி முகந்திருத்திக் களிப்பு மேலீட்டினால் ஆனந்தக் கண்ணீராட்ட அன்பின் மிகுதி யால் மறைந்த முலைப்பாலுந் தானே சொரிய முகமலர்ந் தனள். யமனு மஞ்சத்தக்க வேலைத்தாங்கிய உத்தான பாதன், அரசர் சூழ்ந்து வரவும், வேற்றரசர் பணிந்து செல்லவும், மங்கல வாத்தியங்கள் முழங்கவும், அழகிய பட்டணத்துச் சனங்கள் சந்தோஷத்தினு லாரவாரஞ் செய்யவும், யானையின்மேல் பிள்ளை ஏறிவரப் பட்டணம் வந்து சேர்ந்தனன்.

இவ்வகை உத்தானபாதன் தன் மக்களுடனும் மனைவியருடனும் களிப்புடன் இல்லறத்தான் அடைய வேண்டிய இன்பங்களை யனுபவித்துக் காளைப்பருவ மடைந்து யுவாவா யிருக்கும் தன் புதல்வனை நோக்கி ஐய! சுவயம்புவாகிய பிதாமகனின் புத்ரனாகிய சுவா யம்பு வம்சத்திற்றோன்றினோர் இந்த உலகத்தை முறை வழாமல் ஆண்ட ஆண்டுகள் அளவில்லன. அவ்வாறே கன்னியர்க்கமைவருங் கற்பைப்போல இந்தப் பூமியாகிய மாதை, பெருமைபெறத் தருமதேவதை நாற்காலினு நடந்து செல்ல நிலைபெற்ற வெல்லா உயிர்களுக்கும் நன் மையே நடாத்தி யாண்டு வந்தனன். இனி என்னுயிர்க்

காவன செய்யவேண்டிய தின்றியமையாதது. ஆதலால், அதனை அடையக் காலமும் மூப்பும் குறுகின. இனி ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேடனும், அஷ்ட திக் கஜங்களும், குலவரைக ளெட்டும் சற்று இளைப் பாற என் புயத்துத் தாங்கியிருந்த பாரத்தை இறக்க எண்ணுகிறேன்.

நம் குல முதல்வர்கள் குற்ற நீங்கத் தங்குல முதல்வரே தரணிதாங்கச் சென்று, பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து மேனிலை அடைந்தோர்களை எண் ணின் அளவுபடா. வீடு யாவர்க்கும் கிட்டுவதன்று. அதைச் சபதஞ்செய்து போர் இடை யுத்தத்தில் மாண்டவர், பரம ஞானத்தால் மனத்தெளிவடைந்து உண்மைப் பொருளைக் கண்டவர், அன்றி மண், பெண், பொன் இவ்வாசைகளை வெறுத்தவர்களே அடைவர். இம்மையில் யாவரும் எல்லாவற்றையும் மறக்கச் செய் யும் மரண மென்பதுண்மையாக உள்ளது. ஆதலால், துறவு எனும் தெப்பம் அப்பிறப்பென்னும் கடலைக் கடத்தற்குத் துணை செய்யாவிடின் என்ன துன்ப நேருமோ, மண்ணிற் பிறந்த மக்களுக்கு அருமையாகிய சிறப்பினையுடைய துறவும் அத்துறவிற்கு நெருங்கியவின மாக வுள்ள தெளிவெனப்படும் ஞானமும் ஆகிய இரண்டு சிறகுகள் இருப்பின் இப்பிறவியெனும் பெருஞ் சிறைச் சாலையை யெளிதில் தாண்டிச் செல்லல் ஆகும். இனி வீட்டை அடைய வேண்டுமெனும் தனியாசில் தாழ்ந்த என் மனம், இனியது போலக் காணப்பட்டுத் துன்பத் தைச் செய்கின்ற இந்தப் பூமியை யரசாளுதலை யெண்ணுமோ உன்னை நான் புத்திரனாகப் பெற்றமை யின் இந்த உலகத்தைச் சீருற ஆண்டு மறங்கடிந்து

அறத்தாற்றின் உலகத்தைக் காத்தனன். இம்மை இன்பத்தை யுதவிய நீ அம்மையும் உதவ வேண்டும். ஆதலால் தவமே உயர்ந்தது,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப்படும்"

"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்றறலைப் பட்டவர்க்கு"

"இழைத்த தீவினையையுங் கடக்க வெண்ணுதல்
தழைத்த பேரருளுடைத் தவத்தி னருமேல்
குழைத்த தோரமுதுடைக் கோர நீக்கிவே
றழைத்தநீ விடத்தினை யருந்த லாகுமே"

"கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுற
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
வெச்சிலை நுகருவ தின்ப மாகுமோ"

இனியொரு நொடியும் நானிரேன் என்று துருவனுக்கு பிரமி, இளை, யெனும் இருவரை மணஞ் செய்வித்துத் தான் தாங்கிய நிலப் பொறையை அவன் தோண்மீது இறக்கிவைத்து மனைவியுடன் தவஞ் செய்யச் சென்றனன்.

பின்னர் துருவன், தன் மனைவியருடன் இவ்வரசச் செல்வத்தில் அமிழ்ந்திக் கல்பன், வற்சரன், எனுமிரண்டு குமாரர்களைப் பெற்றுப் பகைவர் முடிவணங்க வளையாக் கோலோச்சி யாண்டுகொண் டிருந்தனன். இது இவ்வாறிருக்க, இவனது சிற்றன்னையின் குமாரனாகிய உத்தமன், ஒரு நாள் வேட்டையாடக் காட்டையடைந்து வேட்டையாடுகையில், அரக்கர் இவனிடம்

போரிட உத்தமன் இறந்தனன். இவனது மரணத்தைக் தூதுவரால் கேட்டதாய் மனம் புழுங்கித் தீராத் துக்கக் கடலுள் மூழ்கிப் புரண்டு தோழியர் தேற்றத் தேறிக் காட்டகத்து என் புதல்வனைத் தேடிக் காண்பேனென்று சென்று காட்டழலிற் பட்டு மாய்ந்தனள். கேட்டீரோ அறிவுடையோரே "பொறுத்தார் பூமியாள்வர் பொங்கினார் காடாள்வர்" என்னும் முதுமொழி இவளிடத்துக் கண்கூடாகக் காணப்பட்டது.

இந்தத் துக்க செய்தியைக் கேட்ட துருவன், "தான் ஆடாவிடினும் தன் தசையாடும்" என்பதைப் போல் இது அரக்கரால் விளைந்த துன்பம் எனத் தேர்ந்து முன்பு பரிச்சித்தின் குமரன் சர்ப்பயாகஞ் செய்வித்துச் சர்ப்பங்களைக் கொலை புரிந்தது போலவும், தந்தையைக் கொன்ற சூரிய வம்சத்து அசரன் பொருட்டுச் சூரிய வம்சத்தைக் கருவறுக்கத் தொடங்கிய பரசிராமன் போலவும் நான் இந்த அரக்கர் பூண்டை வேரறக் களைந்து விடுகிறேன் என்று, அடங்காச் சீற்றத்தனாய் ரத கஜ துரகபதாதிகளைப் பெருங்கடல்க ளேழும் தம் நிலை பெயர்ந்து ஓரிடத்தில் கூடிவந்தனபோலத் திரட்டிக்கொண்டு அரக்கரிடம் போர் செய்யத் தொடங்கி அவர்களிருந்த நகரிடைச்சென்று தனது சங்கத்தைப் பூரிக்க அச்சங்க வொலி செவியிற் கேட்ட அரக்கர் தலைவன், தன்சேனைகளைத் திரட்டி வந்து கடலுடன் கடல் கலந்ததுபோல் ஆரவாரமிட்டுப் பிண்டி பாலம், பலகை, வில், வாள், முசலம் முதலிய அஸ்திர சஸ்திரங்களை யெறிந்தும் கையுடன் கையும் தோளுடன் தோளும், காலுடன் காலும், கைப்போரிட்டும் சாரி வந்தும் சோரி வெள்ளங் கொள்ளப் போரிட்டனன்.

இப் போரில் தெய்வீகப் படையுடைய துருவன் முன் அரக்கர் நிற்காது பின்னிட்டனர்.

இவ்வாறு கோபாக்ராந்தனுய்ப் போரிடும் துருவனிடை மநு தோன்றி, உன் யுத்தத்தைச் சற்று நிறுத்துக ;

"பல்லாவுளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் — தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

"உறற்பால நீக்க லுறுவர்க்கு மகா
பெறற்பா லனையவு மன்னவாம் — மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்"

விளையாதது ஒன்றும் விளையாது வந்த இந்த விளைவு ஊழ்வினையாலே வந்ததே உத்தமனுயிரை ஒரு அரக்கனன்றோ போக்கினன். பழிக்குப் பழிவாங்க வேண்டின் கொன்றானைக் கொல்லுதல் வழக்கு. அவ்வாறன்றி உலகத்திலுள்ள அரக்கரை எல்லா மழிக்கிறேன் எனச் சபதங் கூறலறமாகுமா என்று கூறி மறைந்த பின், குபேரன் விமானத்திற்றோன்றி, துருவனே! உத்தமனைக் கொன்றவர் அரக்கரல்லர். விதியே கொலை செய்தது; நீ உன்னகர் செல்க எனத் துருவன் மீண்டு நகரடைந்து பல வேள்விகளைச்செய்து (உசு,000) ஆண்டு அரசு புரிந்து தன் குமாரனிடம் அரசைச் சுமத்தி, விசாலை நகர் சென்று விமலனாகிய விண்டுவை எண்ணித் தவமேற்கொண்டு தான் முன்னம் திருமாலருளால் பெற்ற வரத்தின்படி சிஞ்சுமாரம் என்கிற கால சக்கரத்தில் சூரிய

சந்திரர்களை வாதக் கயிற்றால் திருப்பிக்கொண்டு தானும் அச் சக்கரத்தை வலம் வந்துகொண் டிருக்கும் உயர் பதத்தை அடைந்தான்.

இந்தக் கதாநாயகனுகிய துருவன் தந்தை உத்தானபாத னென்பவனுக்கு மற்றொரு குமரன் உரோமபதன் என்று இராமாயணத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. அந்த ரோமபதனைப் பற்றிப் பாகவதாதிகளில் கூறப்பட வில்லையாயினும் இவன் மநுவம்சத்தவன் எனவே இராமாயணம் கூறுகிறதால் அவனது சரிதையைச் சிறிது கூறுவோம். உரோமபதன் மநுவம்சத்திற் பிறந்த உத்தானபாதன் குமரன். இவன் அங்கநாட்டை யரசாண்டு வருகையில் நாடு தீக்கோள்களால் நெடுங்காலம் மழையின்றி வறந்தது ;

"மழை யின்றி மாநிலத்தார்க் கில்லை
மழையுந் தவமிலா ரில்வழி யில்லை
தவமும் அரசிலா ரில்வழி யில்லை
அரசனு மில்வாழ் வாரில் வழியில் — எனவும்,

"விசும்பிற் றுளிவீழி னல்லான் மற்றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது" — எனவும்,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி" — எனவும்,

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்" — எனவும்,

அரசன் ஆராய்ந்து தன் சபையிலிருந்த முனிவர்களை ஆலோசித்து மழையின் பொருட்டு யாகாதிகள் முடித்தும் பயனிலாமை கண்டு, பின்னும் முனிவர்களுடன் ஆராய்ந்தனன்.

முனிவர்க ளனைவரும் ஒரு மனப்பட்டவர்களாய் அரசனை நோக்கி, அரசே காசியப புத்திரராகிய விபாண்டகர் என்னு முனிவர் ஒரு நாள் நீராடத் தாம் வளர்த்த பிணையுடன் சென்றனர். அத்தீர்த்தக் கரையில் இவருக்குத் தேவமாதாகிய ஊர்வசி காணப்பட்டனள். கண்ட முனிவர், அவளைக் காமுற அது காரணமாக ஸ்நானஞ் செய்த நீர் வேறுபட்டது அந் நீரை அப் பெண்மானுண்டது. அப் பெண்மானிடம் தலையில் மான் கொம்புள்ளவராய்க் கலைக்கோட்டு முனிவர் பிறந்தனர். அம் முனிவர் சகல குணங்களிலும் கங்கைசூடு மீசனும் புகழ்தற் கொத்தவர். பல கலைகளிலும், நீதிகளிலும், அளவில்லாத சத்தியத்திலும், பிரமனுக்குச் சமமானவர். கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்திலுள்ள மக்களை எல்லாம் மிருகங்களாக எண்ணி இருப்பவர். பெண்களின் உருவத்தையும் கண்ணுற் கண்டறியாதவர். அத்தகைய பெருமை வாய்ந்த கோதில்குணத் தருந்தவனைக் கொணருவாயாயின் மழை உண்டாம் என்றனர்.

கேட்ட அரசன், அம் முனிவரை ஈண்டு வருவிப்பதற் குபாயம் யாதென ஆராயுமிடத்துச் சவைக் கணிருந்த கணிகையர்க ளெழுந்து யாமே சென்று கொண்டு வருகிறோமென்றனர். அரசன் இச் சொற்களைக்கேட்டுக் களிப்புற்று அவர்களுக் கணிதூசு முதலிய கொடுத்துப் பனிப்பிறையைப் பழித்த நுதலையும், பணைத்த மூங்கில்களை யொத்த தோள்களையும், மெல்லிய இடைகளையும், இருண்ட கூந்தலையும், மானை யொத்த கண்களையும், மதிபோலு முகங்களையுமுடைய பூங்கொடியை யொப்பவர்களே போய் அழைதது வாருங்கள் என விடைதந்தனுப்பினன். உத்தரவு பெற்ற பெண்கள், பல

யோசனைகள் கடந்து சென்று, கலைக்கோட்டு முனிவ ரிருக்கு மாச்சிரமம் ஒரு யோசனையிலிருப்ப தறிந்து, அவ்விடத்துத் தாம் ஒரு ஆச்ரமம் செய்துகொண்டு, தவத்தவர் வேடங்கொண்டு வசித்திருந்தனர். இவ்வஞ்ச வேடங்கொண்டோர் விபாண்டகர் நீங்குதலை நோக்கி இருந்து தாங்கள் கலைக்கோட்டு முனிவரை யடைந்தனர்.

இவர்களைக் கண்ட கலைக்கோட்டு முனிவர், இவர் களும் நம்மைப்போல் உலகத்தவரை விலங்குகளாக எண்ணி இருப்பவரென்று நினைத்து, அவர்களுக்கு அர்க் கிய பாத்ய ஆசன ஆசமனாதிகள் வழங்கி நல்வரவு கூறிய பின்பு, வஞ்சவேட முனிவர்கள் தங்களிருப்பிட மடைந் தனர். இவ்வாறே யன்று தொடங்கிப் போக்கு வரவு செய்கையில் ஒரு நாள் நல்ல வாழைக்கனி, மற்றொரு நாள் பலாக்கனி, மற்றொரு நாள் நறுவிய மாங்கனி, பின்னுமவ்வாறே நாள் தோறும் பலவகை இனிய பழ வர்க்கங்களையும் வேறு பல இனிய பண்டங்களையுங் கொண்டுபோய்க் கொடுத்து இனிமை யூட்டித் தம்மிடம் அன்புண்டாக்கிக்கொண்டு ஒரு நாள் முனிவரை நோக்கி, நாங்கள் நாடோறும் உம்மிருக்கைக்கு வருகிறோம். நீங்கள் ஒரு நாளேனும் எங்களாச்சிரமம் வருகின்றிலீர். ஆதலால் அருகிலுள்ள எமது இருக்கைக்கு எழுந்தரு ளல் வேண்டுமென வேண்டுதலும், முனிவர் இசைந்தது கண்டு, முனிவருடன் இதோ இருக்கிற நதியைக் கடந்து அப்புறம் சிறிதுதூரஞ் சென்றால் ஒரு குன்று; அக் குன்றுக் கப்பால் சிறிதுதூரஞ் செல்லின் ஒரு தடாகம்; அத் தடாகத்தைச் சிறிது கடந்தால் ஒரு வனம்; அவ் வனத்திற் கப்பால் சிறிதுதூரஞ் செல்லின் ஆச்சிரமம் இருக்கின்றதென ஆற்றினருமையை இவ்வாறு அணி

மையும் நல்வார்த்தைகளையுங் கூறி மறைத்துக்கொண்டு நகரத்திற்குச் சிறிது சமீபத்தை யடைந்தனர்.

அடைதலும், முனிவரது வருகையை எதிர்நோக்கி யிருக்கும் அரசனது எண்ணம்போல் மேகம், நெஞ்சத்தில் கறையையுடைய நீலகண்டனது களக்கடுப்போல் கருகித் திசைகளிலுள்ள இருள்களை எல்லாம் வாள் கொண்டு வீசி யெறிவதுபோன் மின்னிப் படபடவென வஞ்சநெஞ்ச மனம்போல் திக்குகள் செவிடுபட இடித்துச் சளசளவென வருஷித்தது. இதனால் நெருங்கிய சோலைகளையுடைய வனங்களும், நீர் வறண்ட தடாகங்களும், ஏரிகளும், நதிகளும், கிணறுகளும் வறுமை நோய் நீங்கின. எதிர்நோக்கி இருந்த அரசன், வேவுகாரர்களால் முனிவரது வருகையை யுணர்ந்து, இரண்டு யோசனை தூரத்தில் தனது சதுரங்கசேனைகள் சூழ்ந்து வர மங்கலகோஷத்துடன் காம முதலிய உயிர்க்குற்றங்கள் தமக்கு ஏவல் செய்ய எழுந்தளியிருந்த கோமுனியைப் பெண்கள் தங்கள் சூழ்ச்சியால் கொண்டுவந்ததை எண்ணிக் களிப்புற்று முனிவர் சூழ்ந்துவரப் போய் மன்றலங் கூந்தலையுடைய மாதர்களுக்கு நடுநாயகமாக வரும் மாதவக்குன்றமாகிய கலைக்கோட்டு முனிவரது அடிமிசை கண்ணீர் அருவிபோல் வீழ்ந்து பாதங்களை விளக்க எதிர் நின்று அங்கனைகளை நோக்கி, நீங்கள் எனது எண்ணங்களை முடித்தீர்கள் என்று புகழ, முனிவரிது வஞ்சமென மனத்தில் எண்ணி, வெகுளலும் அரசன் முனிவரது இணைந்த கமலத்தையொத்த பாதங்களை யருச்சித்துத் தாங்கள் எழுந்தருளிய இது, பூர்வத்தில் யான் செய்த புண்ணியம் எனினும் அன்று; இந்நகரத்தவர் செய்த தவந்தானே வென்று உணரினும்

அன்று இந்நகரத்துத் தேவரீரை வலஞ்செய்து வணங்க வெழுந்தருளியது முற்பவத்தில் என் குலத்தலைவர் களாகிய மநுக்கள் செய்த தவம் என்று பல முறை யடியில் வீழ்ந்தனன். முதலில் முனிவர்க்குக் கோபம் உண்டாயிற்று,

“குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது”

இதைக்கண்டு தேவர்கள் முனிவரர் மானிடர் முதலி யோர் வெருவினர். உடனே அந்தக் கோபம்,

“நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும் — அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்”

என்பதுபோல் அது தணிந்தது. அரசன் பணிந்து தன்னருந் துயரத்தையும் நாட்டினது வறுமையையுங் கூறி வேண்டலும் முனிவர்,

“அன்பிலா ரெல்லாந் தமக்குடைய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு” — என,

அரசனுக்கு ஆசிகூறி, இரதத்தின்மீ தேற அரசன் பட்டண மடைந்து முனிவரைச் சிங்காதனத்தில் எழுந் தருளச்செய்து அர்க்கியபாத்ய ஆசமனாதிகள் முதலிய அளித்துத் தன திருக்கையி லிருக்கையில் உலகம் வறுமை நீங்கியது. அரசன் சில நாட்கள் கழிந்தபின் தன் புத்திரியாகிய சுமுகி யென்பவளை முனிவர்க்குப் பாணிக்கிரகணம் செய்வித்தனன். இக்கலைக்கோட்டு முனிவரைத் தசரதன் வேண்டுகோளால் புத்ரகாமேஷ் டிக்கு அனுப்பினவன் இவனே.

இச் சுவாயம்பு மநுவம்சத்தவனாகிய துருவனுக்கு இரண்டு குமாரர்கள். அவர்களாவார், கல்பன், வற்சரன் இவர்களைப் பற்றிய சரித்திரம் ஒன்றுமில்லை. ஆதலால், அவர்களைப் பற்றியும் அம்முதன் மநுவின் புத்திரனாகிய பிரியவிரதனுக்கு ஊர்ச்சலவதிதவிர சம்ராட், குக்ஷி என்று இரண்டு குமரர் இருந்தன ரென்றும் சில புராணங்கள் கூறுகின்றன. அவர்களின் சரிதங்களும் ஒன்றும் எழுதப்படவில்லை. ஆதலால், அம் முதல் மநுவின் சரிதத்தை இம்மட்டில் நிறுத்தி இரண்டாவது மநுவைப் பற்றிப் பேசுவோம்.

## ஐந்தாம் அத்யாயம்

### 2. சுவாரோசிஷ மநு

ஆரியாவர்த்த தேசத்தில் வரணு நதிக்கரையில் பூமிதேவிக்கு ஆரம்போல் மாளிகைகள் விளங்கிய அருணாஸ்பதம் என்று ஒரு பட்டணம் உண்டு. ஆங்குள்ள வேதியர் பிரமதேவனை வெல்லத்தக்கவர்; அரசர் பரசிராமனைப் பின்னடையச் செய்பவர்; வைசியர் குபேரனை ஏவல் கொள்ளத்தக்கவர்; சூத்திரர் உழவின் சம்பத்தால் பலியேற்கும் உருத்திரனையும் தடுக்கவல்லவர்; வேசியர் பரதத்தால் அரம்பையாதியரையும் தலைவணங்கச் செய்பவர்; இந்நகரத்தில், அழகில் மன்மதனையும் ஒளியில் சந்திரனையும், வாக்கில் ஆதிசேஷனையும் வெல்லத்தக்கவனும், நிர்மல கர்மங்களில் பிராம்மண குலத்திற்கு அலங்காரமானவனும், எக்காலத்தும் வேதாத்தியயனம் செய்பவனும் ஆகிய பிரவருடன் என்னும் பெயர்பூண்ட ஒரு வேதியன் இருந்தான். இந்தப் பிரவருடன் அல்லது பிரவரன், தாய் தந்தையருடன் செந்நெறிபூண்டு இல்லறம் நடத்தி வந்தான். இவன் வரணு நதியில் நித்ய கர்மாதிகளையும், பஞ்ச பூசைகளையும், நாள்தோறும் நடத்திவருவன். இவனது பாரியையும் இல்லறத்திற்கு வேண்டியன வழுவாது நடத்திவருவள். இவன் நள்

ளிரவாயினும் அதிதிகளுக்கு அன்னமிட்டு அவர்கள் யாத்திரைசெய்த புண்ணிய க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், பர்வதாதிகளின் மகிமைகளை அருகிலிருந்து கேட்டு வருவன். இவ்வாறு கேட்டு வருநாட்களில் ஒரு வைகல், மத்தியான வேளையில் விபூதிதுளித ருத்ராக்ஷமணிந்த வராய்க் கையில் யோகதண்ட மேந்திச் சடைமுடியுடன் யோகி ஒருவர் அவ்விடம் வந்தனர். அவ்வாறு வந்த யோகியரை எதிர்கொண்டழைத்துப் பூசித்து அதிதி சமஸ்காரஞ்செய்து ஆசனத்திருத்தித் தாங்கள் எழுந் தருளியதால் எங்களில்லம் பவித்திரமாயிற்று ; தேவரீர் மிதித்தவிடம் பிரயாகை ; திருவாக்குகள் வேதமந்திரம் ; பாததீர்த்தம் ஆகாய கங்கை ; தங்களை யொத்த யோகி யரை எந்த வீடு அடைகின்றதோ அவ்வீடே புண்ணிய உலகம் ; அவ் வீட்டுக்குரியானே பாக்கியவான் ; அவன் ஜன்மமே நற்சன்மம் ; தாங்கள் எங்கிருந்து எழுந் தருள்வது எனக் கேட்டனன்.

இவற்றைச் செவிசாய்த்துக் கேட்ட யோகியர், குழந்தாய் ! உங்களை யொத்த கிருகஸ்தர் அன்றோ எம்மை ஒத்த தீர்த்தவாசிகளுக்கு ஆதாரவாயுள்ளவர்கள்; இல்லறத்தான், செவிடர், மொண்டி, முடவர், அந்தகர், பிக்ஷுக்கள், பிரமசாரியர், ஜடிகள், வானப்பிரஸ்தர், சன்னியாசிகள், அதிதிகள், க்ஷபணகர், திகம்பரர், காபாலியர், அநாதைகள், இவர்களுக்கு நடு ஊரிலுள்ள தென்னை, கற்பகம், காமதேனு நீரில்லாவிடத்துள்ள ஓடை, ஆபத்திற்குதவும் அன்னக்குழி ஒத்தவன்; எனக் கூறக்கேட்ட பிரவரன் தாங்கள் சென்ற இடங்களைச் சுருக்கமாக எனக்குக் கூறுக எனவேண்ட, யோகியர் கூறத்தொடங்கினர் :

ஓ பிரம குலாதிபனே! நான் நதி, நதம் உதயா சலம் முதல் அஸ்தாசலம் வரையிலுள்ள மலைகள் இமயாசலம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள தீர்த்த கட்டங்கள் திருக்கேதாரம், பிரயாகை முதலியவை களைச் சேவித்தேன் என்று கூறக்கேட்ட பிரவரன், இந்தச் சிறுவயதில் தாங்கள் எவ்வாறு இவைகளைத் தரிசித்தீர் பக்ஷிகளைப்போல, இறகுகளிருப்பினும் முடியாது, தங்கள் மகாத்மியம் தாங்களே அறிவீர் நாங்கள் அறியோம் என்றனன். யோகியர், வேதியனை நோக்கிப் பிரவரனே, நான் சித்தனுகையால் மூப்பும் ரோகமும் என்னை அணுகா. எனது இரகசியத்தை உனக்குக் கூறுகிறேன் கேள். தெய்வாநுக்கிரகத்தால் எனக்கு ஓஷதி ஒன்று கிடைத்திருக்கின்றது. அதனது மகிமையால் வாயுவேகம் மனோ வேகத்துடன் திரிவேன். ஆகாயத்தில் சூரியாதிக்ரகங்கள் அநாயாசமாக எவ் வளவு தூரஞ் சலிக்குமோ அவ்வளவு தூரம் திரிவேன் என்றனர். பிரவரன், முனிவரைநோக்கி உமது பெருமை எண்ணுது அடியேன் கூறிய சொற்களை மன் னித்து அடியேனையும் தீர்க்க யாத்திரை செய்விக்க வேண்டுகிறேன் என்றனன். யோகியர் அதற்கிசைந்து தம்மிடமிருந்த ரசக்குளிகை யொன்றை அவன் கால் களில் பூசினர்.

பூசியவுடன் பிரவரன், இமய பர்வதங் காணும் ஆவலுடையனுய் அதனை அடைந்து, அப் பர்வ தத்தில் தோற்றும் கங்கை முதலிய புண்ணிய நதிகளின் வீழ்ச்சிகளையும் அலங்காரங்களையும் கண்டு மகிழ்ந்து, அதனை நீங்க மனமிலாது நீங்கி, நரநாராயணர் தவம் செய்த விடமாகிய பதிரி அடைந்து அதன்

நடுவில் செல்லச் செல்ல அவ்விடத்தில் பிரவகித்து வரும் அலக நந்தையின் கரையில் ஒருசார் தங்கினன். ஆங்கு, ஜலகணங்கள் பனி நீர் தெளிப்பதுபோல் வீசவும் குளிர்ந்த வாயு மணமுள்ள புஷ்ப கந்தங்களைக் கொண் டெறியவும், கண்டு மனமகிழ்ந்தனன்.

அது நீங்கிச் சற்று ஒருபுறம் மிருகங்கள் ஒன் றேடொன்று விளையாடும் இடங்களைக்கண்டும், பகீரதன் தவம்புரிந்த சாலை, ஆகாச கங்கை பூமிக்கு வந்தவிடம், உமாதேவியார் சிவபிரானுக்குத் திருப்பணிசெய்த சூழல், மன்மதன் சிவபிரானது நெற்றி விழியால் எரிந்த பிரதேசம், அக்னிதேவன் சப்தரிஷிகளின் தேவியரை மோகித்ததலம், குமாரக்கடவுள் திருவவதார க்ஷேத்ரம், பிரளய காலத்தில் ஊழிக்காற்று மகாக்னியால் நீறுன வைப்பு முனிவர் பலர் தேவர்களுக்கு அவி கொடுக்கு மருங்கு முதலிய பல புண்ணியத் தலங்களைக் கண்டு, ஆனந்த பரவசனுய்த் திரிந்து வருகையில், முன்னம முனிவரின் காலில் பூசிய ரச ஔஷதி இமய மலையின் பனியின் மிகுதியால் கரைந்து போயிற்று. பிரவரன், ஐயோ! முனிவரன் செய்த பாதலேபனம் போயிற்றே. எவ்வாறு, என்னூர்க்கு இந்தப் பேராரண்யத்தைவிட்டு நீங்குவேன் என்று விசனமடைந்து இருந்தனன். இவ்வா றிருக்கையில் ஒருபுறம் பரிமளம்வீசக் கண்டோர் மனத் தைக் கவரத்தக்க ஓரிடம் தோன்றியது. இவ்விடத்தில் யாவரேனும் இருப்பரென ஐயுற்று அவ்வழியே சென் றனன். அப்பாதையில் இரு புறங்களிலும் பூங்கொத்துக் கள் கவரிவீசுவன போல் வீசவும், மா, பலா, தெங்கு முதலிய பல விருக்ஷங்கள் தாமே பழுத்து அவற்றி னின்று மதுரரசம் கானுறுகள் போல் ஓடவும், மதுவை

யுண்ட வண்டுகள் களிப்பால் தம்மை அறியாது ஒன்றுடன் ஒன்று களிபாடவும், கிளிகளோடு கிளிகளும், மயில்களோடு மயில்களும், பேசவும் ஆடவும் சக்ரவாகப் பக்ஷிகள் இணை பிரியாது விளையாடவுங் கண்டு ஓர் மலர் நிறைந்த மாதவிப்பந்தர் போன்ற சித்திரச் சாலையைக் கண்டனன்.

அவ்விடத்தில் அழகியபொன் பிரதிமையைப்போலும் ஓர் அரம்பாஸ்திரி யிருந்தனள். அவ்வரம்பை என்னைச் சற்று உற்று நோக்கி, நிர்மானுஷ்யமான இக் காட்டில் மன்மதனே என்பொருட்டு வந்தானென எண்ணித் தன்னை மறந்து ஆசைகொண்டு எதிர்கொண்டழைத்து ஓர் மரத்தினடியிற் சாய்ந்து மோக வலைப்பட்டவளாய் பின்வருமாறு எண்ணத் தொடங்கினள். இவன் நளகூபரனோ? காமவேளோ? மனித உருக் கொண்ட குமாரக் கடவுளோ? என்று மயங்கி, இவன் என்னை மணக்கின் நான் எடுத்த ஜன்மத்தால் சபலமடைவேன். இவனது கண்கள் தாமரையோ? நாசி குமிழ மலரோ? காதுகள் வெள்ளைத் தண்டோ? முகம் களங்கமிலாச் சந்திரனோ? இதழ்கள் பவளமோ? பற்கள் முத்துக்களோ? கழுத்துப் பாஞ்சசன்னியமோ? தோள்கள் மேருமலைகளோ? இவனது தேக வனப்பைச் சேஷனும் வர்ணித்தலாகாது. என்று எண்ணி, வருந்தினள்.

இவளது துன்பத்தைக் கண்ட நான், அவளை யண்மி, ஓ யுவதி! நீயார்? சற்றும் பயமின்றி, இந்த மனித சஞ்சார மில்லாத அரண்யத்தில் திரிகின்றாய் நானோ வேதியன், என் பெயர் பிரவான், என் மதத்தால் இம் மலைக்கு வந்து வழிதப்பித் தடுமாறுகிறேன். எவ்

விதமேனும் வழி தெரிவித்து என்னூர்க்கு அனுப்பின் உனக்குப் புண்ணிய முண்டாம் என்றனன். இதைக் கேட்ட அரம்பை, நகைத்து என்ன வியப்பு இது வரையில் வாளாவிருந்து இப்போது வந்த வழி தெரியா தென என்னுடன் பேசும் வியாஜம்கொண்டு இவ்வாறு கூறுகின்றாய்; சற்றும் பயமிலி போலும்; இது எங்கள் வாசஸ்தானம்; இவர்கள் என் தோழியர்; இம்மலை களிலுள்ள குகைகளில் நாங்கள் எக்காலத்தும் விளை யாடுவோம். கங்காதரங்கங்களினின்று வரும குளிர்ந்த காற்றால் அலர்ந்த மலர் நிறைந்த இடங்களே எங்கள் உத்தியானம்.

ஓ பிராம்மண! வேஷம் தரித்த மன்மதனே என் ரத்னகிருகத்தில் இன்று தங்கி. அதிதி சத்காரத்தைக் கொள் என்றனள். வேதியன், நீ வாயாற் சொன்னதே யமையும், நான் என் வீடு சேரவேண்டும்; என்மீது கருணை செய்யென, அரம்பை நகைத்து, என் வீடு வீடென்று துன்ப முறுகின்றீர்; இவ்விடத்துற்ற இந்த மாணிக்கக் கிருகத்தையும், இக் கங்கையின் மணல் வெளியையும் அது ஒவ்வுமா? நான் உண்மை கூறு கின்றேன். என் மனம் உன்னிடம் சிக்குண்டது என்னை இந்த மாதவிப்பந்தலிற் கலந்து நான்கொண்ட விரகம் ஆற்றுவையேல் உனக்குப் புண்ணிய முண்டாம் என, வேதியன், அக்னி காரியம் தேவதார்ச்சனை மிகுந்திருக் கின்றன; போஜன காலம் தாமதிக்கின்றது; கிழத் தாய் தந்தையர் வருந்தி என்னை எதிர் நோக்குவர் என்றனன். இதைக்கேட்ட வருதினி சற்று முகங் கோணி, ஓ மன்மதனே! இவ்வாறு உன் யவ்வனத்தை வைதீக கார்யத்தில் கழிப்பையேல் விஷய சுகங்களை

எக்காலத்து அனுபவிப்பது. பல யக்யங்கள் செய்த வரும் எங்கள் சுகத்தை விரும்பியே சுவர்க்க மடைகின்றனர். ஆதலால், என்னை மணந்து சுவர்க்க சுகத்தை அடைக என: வேதியன், நீ கூறிய அனைத்தும் விஷயேச்சை யுடையவனுக்கே அன்றி, என்னை யொத்த நிஷ்காமிக்குத் தகா. ஆதலால், உன் வார்த்தை செல்லாது, உனக்குத் தெரிந்தால் வழிகூறிப் புண்ணியத்தைக் கைக்கொள். இது எனக்குத் தக்கதன்று எந்த விஷயத்தில் மனம் மலர்ச்சி யடைந்து தன்மயத்தை அடையுமோ? இந்திரியாந்தக் கரணங்கள் எதனிடத்து லயமடையுமோ அதுவே பிரம்மானந்தம். அதினிடம் வசப்படுவதே வாழ்க்கை எனக் கூறினன்.

வேதியன் வாய்மொழி கேட்ட வரூதினி, இந்தப் பாண்டித்தியம் உனக்கே யன்றி, மற்றவர்களுக்கன்று. வேதங்களில் கூறிய தர்மங்கள் பாவச் செய்கைகளே. இவ்விஷய இச்சையே புண்ணியம். ஓ வேதியனே! ஓமத்திரவியங்களால் திருப்தி அடையும் அக்னிதேவன் செய்விக்கும் சுகத்தை நீ எப்படி அறிவாய். சரீரம் நசிப்பது நீ சொல்லும் அக்னி எல்லாவற்றையும் தகிப்பது. இந்த உடல் அக்னியால் நசிக்கின், எதனால் போகம் அனுபவிப்பாய். என்று அவனைத் தழுவ, வேதியன் அவளைத் தவிர்த்து நீங்கினன். வரூதினி, அவன் நகம் தன்னைக் கீறியதாக வியாஜம்கொண்டு அவன் எதிரில் கண்ணீர்விட்டு நின்று, ஓ வேதியனே! தவங்களும் யக்யங்களும் செய்தாய் என்றனை, கருணைசுவபாவம் இல்லாவிடத்து எத்தனை தவங்கள் செய்யினும் யாது பயன். எவ்வளவு யாகாதி கிருத்தியங்களைச் செய்தவனும ஒரு பூததயை உள்ளவனுக் கொவ்வான்,

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள" — எனவும்,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாதி யாங்கு" — என,

இவ்வளவு சிந்தியாத உன் அறிவு எதுக்குப் பயன்படும். பாராசரன் தாசராஜ புத்ரியுடனும், விஸ்வாமித்திரன் மேனகையுடனும், இந்திரன் அகல்யையுடனும், சந்திரன் தாரையுடனும் இருக்க வில்லையா? என்று கூறக்கேட்ட வேதியன், அக்னிதேவனைத் துதிக்க; ஓர் பெருங் காற்றுண்டாயிற்று. அந்த வாயு வேகத்தால் வேதியன் தன்னூர் அடைந்து, சத்கர்மங்களை முடித்துத் தாய் தந்தையர்களுடன் சுகமே இருந்தனன்.

அவ்வாறு அந்த வேதியன் வாயுவின் சகாயத் தால் தன்னூரடைந்த பிறகு அந்த வரூதினி அவனது உறுப்பின் அழகுகளைப் பல முறை வருணித்து வரு ணித்து மன்மத பாணங்களின் பாதையால் பீடிக்கப் பட்டு, அந்தப் பருவதத்தின் இடையிலுள்ள வழிகளெல் லாந் தேடிக் காணுது தன்னைத்தேடிவந்த தோழி மாருடன் திரும்பிவந்து, தன் மனதில், ஐயோ! அவ் வேதியன் நானே வலியச்செல்லினும் என்னைச் சற் றேனும் மதியாது அவமதித்துத் தேற்றிப் போயினன்; இந்த விரகதாபத்தை யெவ்வாறு நீந்தக் கடவேன்; என்ன தவஞ் செய்யினும் நான் எங்கு காணக்கடவேன்; என்னை விட்டு அகன்றனனே; தெய்வம் காட்டும் ஊட்டுமா; கைக் கெட்டினது வாய்க் கெட்டாது போயிற்றே, ஆகா அவன் தேகம் மணத்துடன் கூடிய கனகமலை, அவன் சிகையோ சருவண்டின் ஒழுக்கு,

புஜங்களோ இரண்டு மேரு மலைகள், முகமோ பூர்ண சந்திரனை மிஞ்சுகிறது. கண்களோ தாமரை யிதழ்களை மீறுகின்றன, அவனது மிதமிஞ்சின யௌவனத்தையும் அவனது அழகையும் கூடி யனுபவியாத ஒரு ஸ்திரீ யின் யௌவனம் ஏதுக்கு? அவளது அழகு முதலிய வும் மணலில் உகுத்த பால்போலும்; மானிடப் பெண்கள் எவ்வளவு புண்ணியம் செய்தவர்கள்! அவர்கள் பூமான்க ளிடத்துச் சுக மனுபவிக்கு மிடத்துத் தேகமறியாது துக்கத்தைப் போக்கி யின்பம் பெறுவர்; தேவஸ்திரீ களோ சிந்தை கெட்டு வெட்கித் துன்பமடைவரே யன்றி மரணமுறார்; மரணமுறாத எனது நலம் அனைத்தும் பாழ்வீட்டிற்கு ஏற்றிய விளக்கை யொக்கும்; என்று விசன முற்றவளாய்ச் சிந்தை செய்துகொண்டு மன்மத தாபத்தினால் தேகம் தபிக்கப் பெருமூச்சு விட்டு இதயத் தில் இவ்வளவென்று அளவில்லாத துக்கசாகரத்தில் மூழ்கிக் கண்ணீர் காதணிகளில் ஒழுகக் கூந்தலவிழ்ந்து தன்னை மறைத்துக்கொள்ள இடிவிழுந்த நாகம்போல் மன்மத தாபத்திற்குத் தாளாமல் சந்திரனைத் தூஷிக்கும் ரதிதேவிபோல் பூத்த மாதவிப் பந்தரின் கீழ் சந்திர காந்த சிலாதலத்தில் வீழ்ந்து புரண்டு பிரலாபிக்கத் தொடங்கினள்.

சிறுவயதுள்ளவள், மற்றெவரையும் விரும்பாத வள், ஆகிய வரூதினியை மன்மதாவஸ்தைக்கு உட் படுத்திப் பிரவரன் கொடுமை யுள்ளவனாய்த் தள்ளிச் சென்றான் என்ற கோபத்தால் சிவந்தவன்போலச் சூரியன் மேற்றிசையில் அத்தமித்தனன். அவ்வாறு சூரியன் சிவந்ததனால் பெரிய குகைகளில் உறங்கி விழித்த புலிகள் சிவந்துள்ள கானாற்றின் ஜலத்தை

ரக்தமெனச் சங்கித்துக் குடித்தன. காட்டிலுள்ள புதருகளின் இடையில் உறங்கிக்கொண்டிருந்த மான் கூட்டங்கள் பசும்புற்றரைகள் செந்நிறம் பெற்றிருத்தல் கண்டு காட்டுத்தீயென வெருவி இடம் விட்டுப் பெயர்ந்தோடின. ஆச்ர மாந்திரங்களில் உள்ள விருக்ஷ சமூகங்களில் வெயிற் படுதலால் மௌனிகள் தாங்கள் உலரும்படி கட்டிய காஷாய வஸ்திரம் ஆடுகிறதெனச் சந்தேகித்தனர். பெரிய நாற்சந்தியுள்ள சாரல்களையுடைய அச்செந்நிறம்படச் செவந்த பர்வதச் சிகரங்களைக்கண்ட தேவர்கள் இது மேருவெனவெண்ணிப் பிரமித்துத் தள்ளாடி விமானத்துடன் இறங்கினர். அம்பலை முருக்கமலர்களாலும், பிரவாளத்தாலும், குங்குமமலர்களாலும், செவந்த தளிர்களாலும், செவந்த அசோகு மலர்களாலும் ஜபாகுசுமமலர்களாலும் செந்நிறத்திற்குத் துணையானதா யிருந்தது. சூரியன் அஸ்தமித்தனன் நான் இப்போதே சந்திரனை அழைக்கிறேன் என்று இரவு என்கிற பெண் தன் தோழியரில் பலரையனுப்புவது போல் பொருள்களின் நிழல்கள் அதிதீர்க்கமாய்க் கீழ்த்திசையில் நீண்டன.

இவ்வாறு சூரியன் அத்தமித்த செந்நிறத்தால் தன்னிறமாறிய மற்றொருபக்ஷியைக் கண்ட பேடைச் சக்ரவாள மொன்று, தன் ஆண் என எண்ணி அருகிற் சென்று ஒலியால் தன் ஆணன்றெனவெண்ணிப் பறந்து ஆகாயத்தை நோக்கும் அங்குக்காணுததினுல் இழிந்து ஒரு தாமரை மலரையடைந்து நீர் வேட்கைதீர நீரையுண்ணப் போம் அவ்வாறுண்ட நீர் ருசிக்காமையால் அதனை விட்டுத் தன் நிழல் நீரில் காண ஆணென்று ஐயுற்று நீரில் குதிக்கும்நீரால் நனைந்ததால் வேறு

மலரடைந்து ஆங்கு ரீங்காரம் செய்யும் ஆணுடன் கூடிய பேடை வண்டுகளைக் கோபத்தால் கொத்தும்.

இவ்வாறு பக்ஷிக்கே யிவ்வளவு விரகமானால் மற்றவர்க்குக் கேட்பானேன். அந்தச் செவ்வானம், சூரியன் அத்தமிக்கையில் மேலைச் சமுத்திரத்திலிருந்து எழுந்துவந்த ஆதிசேஷனுடைய படத்தின்மீதிருந்த மாணிக்கக் காந்தியோ! அஸ்தகிரியில் சூரியன் அஸ்தமிக்கையில் ஜ்வலிக்கிற சோதிக் கொடிகளின் பிரகாசமோ, சூரிய ரதத்தின் முனைதாக்கத் திக்குகள் பிளந்து உள்ளே சென்ற பிரமாண்டமெனும் பொன் கங்காளத்தின் காந்தியோ, சந்தியாகாலதது நடனமிடுஞ் சிவன் தாண்டவம் ஆடுங்காலத்து இரவு எனும் ஸ்திரீ பிடித்த தீவஷ்டியோ, மேலைத் திக்கஜங்களுக்கு மதம் ஏறித்தாகம் கொள்கையில் அதனைத் தணிக்க வருணனின் சம்பந்தியாகும் பாகன் அந்தத் திக்கஜங்களைக் கட்டும் தறிக்கண் தங்கிய மணல் மேடோ எனும்படி அந்தச் சந்தியாகாலம் பிரகாசித்தது. பின்னர் அதிகமான ஆவரணஜலத்தில் மிதக்கும் பிரமாண்டம் தீக்ஷணமான சூர்ய காந்தியால் கெட்டுக் கருமை பெற்றதென்று கூறும்படி இருள் மூடிக்கொண்டது. அந்த இரவு, கஸ்தூரிப் பூச்சுகளை தேகமெங்கும் பூசின கிராத வேடங்கொண்ட சிவபிரானின் திருமேனியை மிஞ்சியும் மயிற் பிஞ்சங்களைத் தலையிலணிந்த கிருஷ்ண மூர்த்தியின் திருமேனி போலும் கருமையுள்ள அன்னங்களின் கூட்டங்களால் நிறைந்ததாய்ப் பிரவகிக்கும் யமுனையின் கர்வத்தைப் பங்கப்படுத்தி யிருளடைந்த விருக்ஷங்களால் நிறைந்த இருட் குன்றத்தைக் கடந்ததாய் இருள் மூடிக்கொண்டது. பிறகு கிழக்கெனும்

148316
600 008

## அனுபந்த வாசக புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸர் தாமஸ் மன்ரோ ... ... ... | 0 | 10 | 0 |
| வீரலக்ஷ்மி ... ... ... | 0 | 10 | 0 |
| புதிய வனத்துக் குழந்தைகள் ... ... | 0 | 10 | 0 |
| இந்து ஸ்திரீரத்தினங்கள் ... ... | 0 | 8 | 0 |
| ஆங்கில மாயா விநோதக் கதைகள் ... | 0 | 6 | 0 |
| காந்தாமணி ... ... ... | 0 | 6 | 0 |
| மகா காவிய வசனம் ... ... ... | 0 | 6 | 0 |
| பாலர் ராமாயணம் (பாலகாண்டம்) ... | 0 | 4 | 6 |
| தாகூர் கதைகள் - I ... ... ... | 0 | 4 | 0 |
| தாகூர் கதைகள் - II ... ... ... | 0 | 4 | 0 |
| அசோகர் சரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| ஒரு பூனையின் சரித்திரம் ... ... | 0 | 4 | 0 |
| ராபின்ஸன் குரூஸோ... ... ... | 0 | 4 | 0 |
| மனோன்மணி ... ... ... | 0 | 3 | 0 |
| பல்லவர்கோன் ... ... ... | 0 | 3 | 0 |
| துஷ்யந்தன் ... ... ... | 0 | 2 | 6 |
| சூளாமணி ... ... ... ... | 0 | 2 | 6 |
| அனசூயா ... ... ... ... | 0 | 2 | 6 |
| குருபக்தி ... ... ... ... | 0 | 1 | 6 |

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

புத்தகவியாபாரிகள், 35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.